بسم الله الرحمن الرحیم　　نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم　　وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 41

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

14 ரபிய்யுல் அவ்வல் 1438 ஹிஜ்ரி கமரி　　15 ஃபதஹ் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி　　15 டிசம்பர் 2016

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**அஹ்மது பேக்கின் மருமகன் தொடர்பாகவும் இந்த முன்னறிவிப்பு நிபந்தனைக்குட்பட்டதாக இருந்தது என்று மீண்டும் மீண்டும் எழுதி விட்டோம்.**

**எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகளில் அவற்றை ஒருவரது பணிவான வேண்டுதல்கள் மூலமாக அல்லது தன் தரப்பிலிருந்தே அது நிகழ்வதை ஒத்திப்போடுவதற்கான ஆற்றல் அல்லாஹ்வுக்கு இருக்கின்றது. உலகிலுள்ள எல்லா சமுதாயங்களும் இவ்விஷயத்தில் ஒருமித்த கருத்தை உடையவர்களாக இருக்கின்றன. அதாவது, வரவிக்கும் துன்பங்கள் முன்னறிவிப்புகளின் வடிவில் வெளிப்படுத்தப்பட்டாலும் அல்லது இறைவனது நாட்டத்தில் அவை மறைவாக இருந்தாலும் அவை சதகா, தானதருமங்கள், தவ்பா, இஸ்திஃபார் ஆகியவற்றால் விலகி விட முடியும். அதனால்தான் மக்கள் துன்ப வேளைகளில் சதகா மற்றும் தானதருமங்களை வழங்குகின்றனர். அது அல்லாமல் பலன் தராத பணியை யார் செய்வார்?**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

அஹ்மது பேக்கின் மருமகன் தொடர்பாகவும் இந்த முன்னறிவிப்பு நிபந்தனைக்குட்பட்டதாக இருந்தது என்று நாம் மீண்டும் மீண்டும் எழுதி விட்டோம். பிரசுரங்களில் நாம் ஏற்கனவே வெளியிட்டிருந்த நிபந்தனையின் சொற்கள் இவையாகும். اَيُّهَا الْمَرْاَةُ تُوْبِيْ تُوْبِيْ فَاِنَّ الْبَلَاءَ عَلٰى عَقِبِكِ இவை இல்ஹாமின் சொற்களாகும். இவை அந்தப் பெண்ணின் பாட்டியை நோக்கியே கூறப்பட்டிருக்கின்றது. அவர் தொடர்பாகவே இந்த முன்னறிவிப்பு இருக்கின்றது. மேலும், ஒருமுறை நான் இந்த இல்ஹாமை முன்னதாகவே மவ்லவி அப்துல்லாஹ் சாஹிபின் சந்ததிகளில் ஒருவரிடம் ஹோஷ்யார்பூரில் கூறியிருந்தேன். அவரது பெயர் அநேகமாக அப்துர் ரஹீம் அல்லது அப்துல் வாஹித் ஆகும். இந்த இல்ஹாமிய சொற்றொடரின் மொழியாக்கம் இதுவாகும்: பெண்ணே ! தவ்பா செய் ! தவ்பா செய் ! ஏனென்றால், உனது மகன் மீதும் மகளின் மகன் மீதும் ஒரு துன்பம் வரவிருக்கின்றது. இந்த முன்னறிவிப்பில் அஹ்மது பேக் மற்றும் அவரது மருமகன் பற்றிய செய்தி தெரிவிக்கப் -பட்டிருந்தது. அதற்கேற்ப அஹ்மது பேக் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் இறந்து விட்டார்.[1] மேலும், அந்தப் பெண்ணின் மகள் மீது துன்பம் வந்து விட்டது. ஏனென்றால், அவள் அஹ்மது பேக்கின் மனைவியாவாள். அஹ்மது பேக் மரணித்து விட்டதால் அவருக்கு நெருக்கமானவர்களிடம் பெரும் அச்சம் மிகைத்திருந்தது. எதுவரையென்றால் அவர்களில் சிலர் துஆ செய்யுங்கள் என்று மிகவும் பணிவுடனும் தாழ்மையுடனும் எனக்கு கடிதமும் எழுதினர். எனவே, இறைவன் அவர்களின் இந்த அச்சம் மேலும் இந்த அளவு பணிவையும் தாழ்மைக் குணத்தையும் அவர்கள் கடைபிடித்தது ஆகியவற்றின் காரணமாக முன்னறிவிப்பு நிறைவேறுவதில் காலதாமதத்தை ஏற்படுத்தி விட்டான். மேலும், எவையெல்லாம் மவ்லவி முஹம்மது ஹுஸைன் மற்றும் அவர்களது நண்பர்கள் தொடர்பான முன்னறிவிப்பில் இறைவனின் இல்ஹாமில் எழுதப்பட்டிருந்தனவோ அவற்றில் அது நிறைவேறும் எந்தவொரு தேதியும் நிர்ணயிக்கப்படவில்லை. எனது துஆக்களில் மட்டும் எனது சொற்களில் நான் கூறியவை இடம்பெற்றிருந்தன. அவை இறையறிவிப்பின் சொற்கள் அல்ல. அது என் தரப்பிலிருந்து செய்யப்பட்ட துஆ மட்டுமேயாகும். அதாவது, இந்தக் காலகட்டத்திற்குள் அவ்வாறு நடக்க வேண்டும் என்று துஆ செய்திருந்தேன். எனவே, இறைவன் தனது வஹியில் கூறப்பட்டிருப்பதை நிறைவேற்றுவதைப் பேணி நடக்கின்றான். ஒருவர் தன் தரப்பிலிருந்து வேண்டுவதற்கேற்ப முற்றிலும் அதை கருத்தில் கொள்ள வேண்டும் என்பது அவன் மீது கடமை அல்ல. எனவே, அரபியில் வெளியிடப்பட்டிருந்த இந்த முன்னறிவிப்பில் அவர் இந்த மாதத்தில் அல்லது வருடத்தில் இழிவிற்கு ஆளாக்கப்படுவார் என்று எந்த கால அவகாசமும் நிர்ணயிக்கப்படவில்லை. எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகளில் அவற்றை ஒருவரது பணிவான வேண்டுதல்கள் மூலமாக அல்லது தன் தரப்பிலிருந்தே அது நிகழ்வதை ஒத்திப் போடுவதற்கான ஆற்றல் அல்லாஹ்விற்கு இருக்கின்றது என்பது தெரிந்த விஷயமாகும். சுன்னத்தைச் சார்ந்திருக்கும் அனைவருக்கும் இன்னும் சொல்வதென்றால் எல்லா நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம் அவர்களுக்கும் இவ்விஷயத்தில் ஒருமித்த கருத்து இருக்கின்றது. ஏனென்றால், எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்பில் இறைவன் தரப்பிலிருந்து ஒரு துன்பம் ஒருவருக்கு விதிக்கப்பட்டிருக்கின்றது என்றால் அது சதகா, தான தருமங்கள், தவ்பா, இஸ்திஃபார் ஆகியவற்றால் விலகி விட முடியும். எனவேதான் மக்கள் துன்ப வேளைகளில் சதகா மற்றும் தான தருமங்களை வழங்குகின்றனர். அது அல்லாமல் பலன் தராத பணியை யார் செய்வார் ? எல்லா நபிமார்களும் இந்த விஷயத்தில் ஒருமித்த கருத்தை உடையவர்களாக இருக்கின்றனர். அதாவது சதகா, தான தருமங்கள், தவ்பா, இஸ்திஃபார் ஆகியவற்றின் மூலமாக துன்பம் அகற்றப்படுகின்றது. இது எனது சொந்த அனுபவமாகும். சில நேரங்களில் இறைவன் என் தொடர்பாக அல்லது எனது சந்ததிகள் தொடர்பாக அல்லது எனது ஏதாவதொரு நண்பர் தொடர்பாக அவர்களுக்கு வரவிருக்கின்ற ஒரு துன்பத்தைப் பற்றிய செய்தியை தெரிவிக்கின்றான். அது நீங்குவதற்காக துஆ செய்யப்படும்போது நாம் அந்த துன்பத்தை அகற்றி விட்டோம் என்று மீண்டும் இரண்டாவது இல்ஹாம் வருகின்றது. எனவே, இவ்வாறு எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்பு கண்டிப்பாக நிறைவேற வேண்டும் என்றிருந்தால் நான் எண்ணற்ற தடவைகள் பொய்யனாக ஆக முடியும். நமது எதிரிகளுக்கும் தீங்கு விளைவிப்பவர்களுக்கும் இந்த வகையான பொய்ப்படுத்துதலில் ஆர்வம் இருக்கின்றது என்றால், மேலும் அவர்கள் விரும்பினால் பிறகு நான் இதுபோன்ற பல முன்னறிவிப்புகள் பற்றியும், பிறகு அவை ரத்து செய்யப் -பட்டிருப்பது பற்றியும் அவர்களுக்கு தகவல் தருவேன். நமது இஸ்லாத்திலுள்ள விளக்கவுரைகளிலும் பைபிளிலும் கூட இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது. அதாவது, ஒரு அரசர் தொடர்பாக அந்தக் காலத்தின் நபி அவரது வயதில் இன்னும் பதினைந்து நாட்கள் மட்டுமே எஞ்சியிருக்கின்றது என்று முன்னறிவிப்பு செய்திருந்தார். ஆனால், அந்த அரசர் முழு இரவும் அழுது கொண்டேயிருந்தார். அப்போது அந்த நபிக்கு நாம் பதினைந்து நாட்களை பதினைந்து வருடங்களாக மாற்றி விட்டோம் என்று இரண்டாவது முறையாக இல்ஹாம் வந்தது. நான் எழுதியிருப்பது போன்றே இந்த வரலாறு நமது நூல்களிலும் யூதர்கள் மற்றும் கிறித்தவர்களின் நூல்களிலும் கூட இருக்கின்றது. இப்போது நீங்கள் அரசரின் வயதில் பதினைந்து நாட்கள் மட்டுமே எஞ்சியிருக்கின்றது என்றும் பதினைந்து நாட்களுக்கு பிறகு அவரது மரணம் நிகழும் என்றும் கூறிய அந்த நபி தனது முன்னறிவிப்பில்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

செல்வத்தை சேர்ப்பது மற்றும் அதை தன்னுடைய சுகபோகங்களுக்காக மட்டுமே செலவு செய்வதே அவர்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதிக்கு காரணமாக அமையும் என்று இன்றைய உலகம் கருதுகின்றது. ஆனால் மார்க்கத்தைப் பற்றிய உண்மையான அறிவு மற்றும் ஞானமுடைய உண்மையான நம்பிக்கையாளர் இதை புரிகின்றார். அதாவது சந்தேகமின்றி உலக அருட்கள் மற்றும் வசதிகளை இறைவன் மனிதனுக்காக படைத்திருக்கின்றான். ஆனால் வாழ்க்கையின் உண்மையான நோக்கம் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதாகும். இறையச்சத்தின்படி நடப்பதாகும். அல்லாஹ்விற்குரிய உரிமையை வழங்குவதாகும். மேலும் அவனது படைப்பினங்களுக்குரிய உரிமையை வழங்குவதாகும்.

இறை படைப்பினங்களோடு அனுதாபம் காட்டுவதில் எங்கு தேவையுடையவர்களின் தேவை கருத்தில் கொள்வோமோ அதே வேளையில் அவர்களது மார்க்கம் மற்றும் ஈமான் மற்றும் அவர்களை இறைவனுக்கு அருகில் கொண்டு வருவதிலும் கவனம் காட்ட வேண்டும்.

இந்த காலத்திலும் கூட உலகத் தேவைகளை பூர்த்தி செய்வதோடு மட்டுமின்றி அதற்காக செலவிடுவது அவசியமாகும். அத்துடன் ஏழைகளுக்கு உதவி செய்வதும் அவசியமாகும். அஹ்மதிகளாகிய நாம் ஆன்மீக தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் செல்வத்தைச் செலவிடுவது அவசியமானதாகும். ஏனென்றால், நேர்வழியை முழுமையடையச் செய்யக்கூடிய அந்த பணி இப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

---

இந்த காலத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே நம்பிக்கையாளர்களில் எப்படிப்பட்ட ஒரு ஜமாஅத் என்றால் அது ஓர் அமைப்பின் கீழ் செலவிடுகின்றது. இஸ்லாத்தை பரப்புவதற்காக செலவிடுகின்றது. அதில் பல்வேறு வழிவகைகள் மூலமாக தப்லீக்கின் பணிகள் உள்ளன. மனித குலத்தின் மீதுள்ள அனுதாபத்தின் காரணமாக அவர்களுடைய உரிமையை செலுத்தியவாறு அவர்களுக்காகவும் செலவிடப் -படுகின்றது. பெரும்பாலார் எப்படிப்பட்ட மக்களாக இருக்கின்றர் என்றால் கஷ்டத்தை சகித்துக் கொண்டு செலவிடுகின்றனர். இந்த செலவு செய்தல் அல்லாஹ்வினுடைய நெருக்கம் மற்றும் திருப்தியை பெற்றுத் தரும் அதே வேளையில் சரியான வழியில் செலவிட முடியும் என்ற நம்பிக்கையில் அவர்கள் செலவிடுகின்றனர். இந்த விஷயத்தை சில அந்நியர்களும் கூட ஏற்றுக் கொள்கின்றனர். அதாவது ஜமாஅத்தினுடைய பொருளாதார அமைப்பு மற்றும் செலவிடுதல் மிகச்சிறப்பானதாக இருக்கின்றது என்கின்றனர்.

சந்தாவிற்கு தூய செல்வம் மிக அவசியமாகும். குறைந்தபட்சம் இது தவறான வழியில் சம்பாதிக்கப்பட்ட பணம் இல்லை என்று தெரிந்த நபர்களிடமிருந்தே சந்தாவும் வசூல் செய்யப்படுகின்றது. அது தவறான வழியில் சம்பாதிக்கப்பட்ட பணமாக இருக்கின்றதென்றால் அவர்களிடமிருந்து ஜமாஅத் அமைப்பு சந்தா வாங்குவதில்லை. தெரிந்தும் கூட வாங்கப்படுகிறது என்றால்அது எனக்கு தெரிய வந்தால் எந்நிலையிலும் ஒன்று சந்தா திருப்பி ஒப்படைக்கப்படுகின்றது அல்லது அந்த பொறுப்பாளர்கள் பணி நீக்கம் செய்யப்படுகின்றார்கள். அசல் விஷயம் என்னவென்றால் தியாகம் செய்தவாறு வழங்க வேண்டும். மேலும், தூய செல்வத்திலிருந்து வழங்க வேண்டும் என்பதாகும். அப்போது தான் அதில் அருள் ஏற்படுகின்றது.

நான் இன்று தஹ்ரீகே ஜதீதின் புதிய ஆண்டிற்கான அறிவிப்பையும் செய்வேன். எனவே தியாகம் செய்யக்கூடிய ஒரு சிலருடைய சம்பவங்களையும் கூறுவேன். அவை பொருள் தியாகத்தோடு தொடர்புடையவையாகும். பணக்கார நாடுகளில் மட்டுமின்றி ஏழை நாடுகளிலும் இன்னும் சொல்வதென்றால், முற்றிலும் புதிதாக இணைந்த அஹ்மதிகளும் கூட அதாவது அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அல்லாஹ் அவர்களது உள்ளத்தை எவ்வாறு திருப்புகின்றான். கஷ்டம் இருந்தும் கூட அவர்கள் பொருள் தியாகத்தில் எவ்வாறு முன்னேறுகின்றார்கள் என்பதைப் பற்றி கூறுவேன்.

---

பொருள் தியாகங்கள் மற்றும் அல்லாஹ்வின் அருட்கள் பற்றிய எண்ணற்ற சம்பவங்கள் இருக்கின்றன. என்னிடம் வந்துள்ள சம்பவங்களிலிருந்து எதை தேர்ந்தெடுப்பேன் என்பது கடினமாகி விட்டது. ஒரு சிலவற்றை மட்டுமே எடுத்துக் கூறியுள்ளேன். நான் கூறியது போன்று எல்லா நாட்டில் வசிக்கக்கூடியவர்களுடனும் அல்லாஹ் இவ்வாறே நடந்து கொள்கின்றான். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தவாறு அவனுக்காக தியாகங்கள் செய்கின்றவர்களுக்கு அல்லாஹ் அளவில்லாமல் அருளுகின்றான்.

**பல்வேறு நாடுகளில் ஜமாஅத் சகோதரர்கள் செய்கின்ற பொருள் தியாகங்கள் தொடர்பான வியக்கத்தக்க ஈமானுக்கு எழுச்சியூட்டக் கூடிய ஆன்மாவிற்கு எழுச்சியூட்டக்கூடிய சம்பவங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.**

ஆராய்ந்து பார்த்ததன் அடிப்படையில் இங்கு M.T.A கேட்கும் பழக்கம் எந்த அளவிற்கு இருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு இல்லை. அல்லது குறைந்த பட்சம் என்னுடைய குத்பாக்களை நேரடியாக கேட்பதில்லை. ஜமாஅத் அளவில்லாமல் செலவிடுகின்றது. அது ஜமாஅத்தின் தர்பிய்யத்திற்காகவே ஆகும். நேரம் வித்தியாசப்படுகிறது என்றாலும் கூட மறு ஒளிபரப்பு வரும் போது குத்பாவை கேட்க வேண்டும்.

---

அல்லாஹ் M.T.A -வை ஜமாஅத்தை கிலாஃபத்தோடு ஒன்றிணைப்பதற்கு ஓர் ஊடகமாக ஆக்கி இருக்கின்றான். வீடுகளில் நீங்கள் இதன் பக்கம் கவனம் செலுத்தவில்லையாயின் மெது மெதுவாக உங்களது சந்ததிகள் பின்னால் விலகிச் செல்ல ஆரம்பித்து விடுவார்கள். வருந்தும் தருணம் வருவதற்கு முன்னரே தங்களை கிலாஃபத்தோடு இணைத்துக் கொள்ளுங்கள். அதற்கான சிறந்த வழிமுறையாக இறைவன் M.T.A -வை வழங்கி இருக்கின்றான். அதை பயன்படுத்துங்கள். வேறு பல நல்ல நிகழ்ச்சிகளும் M.T.A -வில் வருகின்றன. ஆனால் குறைந்த பட்சம் குத்பாவையாவது கேளுங்கள். முரப்பி சாஹிப் சுருக்கத்தை வாசித்து விட்டார். எனவே குத்பாவில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பது எங்களுக்கு தெரிந்து விட்டது என்று இருக்கக் கூடாது. சுருக்கமாக கேட்பதற்கும் முழுமையாக கேட்பதற்கும் வித்தியாசம் இருக்கின்றது.

---

1934 -ல் அஹ்ராரிகள் ஜமாஅத்தை அழித்து விடுவோம் என பேசி வந்தனர். காதியானின் செங்கல்களை பிடுங்கி வீசி எறிந்து விடுவோம் என்று கூறி வந்தனர். அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீதிற்கான அறிவிப்பைச் செய்து உலகில் மிஷனரிகளை அனுப்புவதற்கான திட்டத்தை வகுத்தார்கள். தப்லீக்கிற்கு ஒரு முழுமையான திட்டம் வகுக்கப்பட்டது. இன்று அல்லாஹ்வின் அருளால் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் அஹ்மதிய்யா ஜமாஅத் அறியப்படுகின்றது. 209 நாடுகளில் ஜமாஅத் நிறுவப்பட்டு விட்டது.

***கடந்த வருடம் (2015 – 2016) உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு தஹ்ரீகே ஜதீதினுடைய பொருளாதாரத் திட்டத்தில் ஒரு கோடியே 9 இலட்சத்து 33 ஆயிரம் பவுண்டுகள் (ஸ்டெர்லிங்) தியாகம் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது – அல்ஹம்துலில்லாஹ்.***

உலக அளவில் ஜமாஅத்துகளுடைய தர வரிசையின் அடிப்படையில் பாகிஸ்தான் முதலிடத்தில் இருக்கின்றது. அதற்குப் பிறகு ஜெர்மனி, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா இருக்கின்றது. பல்வேறு அம்சங்களின் பெரும் பெரும் நாடுகளில் தஹ்ரீகே ஜதீதின் பொருளாதாரத் திட்டத்தில் பொருள் தியாகங்கள் செய்யப்பட்டிருப்பது தொடர்பான ஆய்வு அறிக்கை. அல்லாஹ் இந்த திட்டத்தில் இணைந்த அனைவரின் பொருளிலும் ஆன்மாவிலும் அளவற்ற அருள் புரிவானாக! மேலும் இவர்களின் தியாகங்களை ஏற்றுக் கொள்வானாக! மேலும் இனியும் முன்னேறியவாறு பங்கு பெறுவதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக! மேலும், இவர்களுக்கு கிலாஃபத்தோடு இன்னும் உறுதியான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டே செல்வானாக! **ஆமீன்.**

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **கனடாவின் கெல்கரியிலுள்ள பைத்துந் நூர் பள்ளிவாயிலில்**
**11 நவம்பர் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **11 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ** பேருரை

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ . الرَّحْمٰنِ الرَّحِيْمِ . مٰلِكِ يَوْمِ الدِّيْنِ . اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ . اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ . صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ .

பொருள் தியாகத்தைப் பற்றி கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: உலகில் மனிதன் செல்வத்தை அதிகமாக நேசிக்கின்றான். அதனால்தான் கனவிற்கான விளக்கத்தில் ஒருவர் தன்னுடைய இதயத்தை எடுத்து மற்றவருக்கு வழங்குவதாகக் கண்டால் அதன் பொருள் செல்வமாகும் என்று எழுதப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இதன் காரணமாகத்தான் உண்மையான இறையச்சம் மற்றும் ஈமானைப் பெறுவதற்கு لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ என்று இறைவன் கூறியுள்ளான். அதாவது, உங்களுக்கு விருப்பமான பொருளை செலவு செய்யாத வரை ஒருபோதும் உண்மையான நன்மையைப் பெற முடியாது. (3:93)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஏனென்றால், இறை படைப்பினங்களோடு அனுதாபம் காட்டுதலின் ஒரு மிகப்பெரும் பகுதி செல்வத்தை செலவு செய்வதன் தேவையை உணர்த்துகின்றது. அது ஈமானின் இரண்டாகவது பகுதியாகும். அது அல்லாமல் ஈமான் முழுமையடையவும் உறுதியடையவும் முடியாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள் : எதுவரை மனிதன் தியாகங்கள் செய்வதில்லையோ அதுவரை அவன் மற்றவருக்கு எவ்வாறு பலனளிக்க முடியும்? மற்றவருக்கு முன்னுரிமை அளித்து பலனளிப்பது மற்றும் அனுதாபம் காட்டுவதற்கு தியாகம் முக்கியமான விஷயமாகும். மேலும், இந்த வசனத்தில் அதாவது لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ என்ற வசனத்தில் அந்த தியாகத்திற்கான போதனை மற்றும் வழிகாட்டல் வழங்கப்பட்டிருக்கின்றது. எனவே, செல்வத்தை இறை வழியில் செலவிடுவதும் மனிதனுக்கு நற்பேற்றை வழங்கக் கூடியதும் இறையச்சத்தைப் பெறுவதுமாகும். (மல்.ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 95-96; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் வெளிப்பட்டது)

அன்னார் இந்த மேற்கோளில் கூறியுள்ளதை எடுத்துரைப்பதற்கு முன்பு அன்னாரது இன்னொரு மேற்கோளையும் படித்து விடுகின்றேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: விஷயம் என்னவென்றால், உண்மையான மகிழ்ச்சிக்குக் காரணமாக இருக்கின்ற இறை திருப்தியை தற்காலிக கஷ்டங்களைச் சகித்துக் கொள்ளாத வரை பெற முடியாது.

பிறகு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: இறை திருப்தியைப் பெறுவதற்காக கஷ்டங்களை பொருட்படுத்தாதவர்கள் வாழ்த்துக்கு உரியவர்களாவர். ஏனென்றால், நிலையான மகிழ்ச்சி மற்றும் அதன் ஒளி அந்த தற்காலிக கஷ்டத்தை சகித்துக் கொண்ட பிறகு நம்பிக்கையாளர்களுக்கு கிடைக்கின்றது. (மல்.ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 76; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் வெளிப்பட்டது) செல்வத்தை சேர்ப்பது மற்றும் அதை தன்னுடைய சுகபோகங்–களுக்காக மட்டுமே செலவு செய்வதே அவர்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதிக்கு காரணமாக அமையும் என்று இன்றைய உலகம் கருதுகின்றது. ஆனால் மார்க்கத்தைப் பற்றிய உண்மையான அறிவு மற்றும் ஞானமுடைய உண்மையான நம்பிக்கையாளர் இதை புரிகின்றார். அதாவது சந்தேகமின்றி உலக அருட்கள் மற்றும் வசதிகளை இறைவன் மனிதனுக்காக படைத்திருக்கின்றான். ஆனால், வாழ்க்கையின் உண்மையான நோக்கம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதும், இறையச்சத்தின்படி நடப்பதும், அல்லாஹ்விற்குரிய உரிமையை வழங்குவதும், அவனது படைப்பினங்களுக்குரிய உரிமையை வழங்குவம் ஆகும். அல்லாஹ் இந்தக் கருத்தை இந்த திருக்குர்ஆன் வசனத்தில் கூறியிருக்கின்றான்.

அதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு விளக்கியிருக்கின்றார்கள். அதாவது, உண்மையான நிம்மதி நன்மைகளைச் செய்வதன் மூலமாகவே கிடைக்கும். செல்வத்தை சேர்ப்பதனால் அது கிடைக்காது. மேலும், அல்லாஹ் மற்றும் அவனுடைய படைப்பினங்களுக்குரிய உரிமையைச் செலுத்துவதற்காக உங்களுக்கு விருப்பமான பொருட்களை செலவு செய்யாதவரை நன்மையின் அந்த தரத்தை உங்களால் அடைய முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: செல்வமும் பொருளும் எப்படிப்பட்ட ஒன்று என்றால் அதனை மனிதன் அதிகமாக நேசிக்கின்றான்.

இன்று நாம் ஆராய்ந்து பார்த்தால் உலகத்தின் குழப்பங்கள் மற்றும் நிம்மதியற்ற நிலைமைக்குக் காரணம் செல்வத்தின் மீதுள்ள அன்பு மற்றும் பேராசையே ஆகும். பிறகு உலகவாதிகளுக்கு அவர்களிடம் ஏராளமான செல்வங்கள் வந்து விட்டால் அதை எவ்வாறு செலவு செய்ய வேண்டும் என்று கூட அவர்களுக்கு தெரியவில்லை. இந்த நாடுகளில் அதாவது மேற்கத்திய நாடுகளில் அதாவது முன்னேற்றமடைந்த நாடுகள் என்று இவை அழைக்கப்படுகின்றன. இங்கு சந்தேகமின்றி பெரும் பெரும் பணக்காரார்கள் இருக்கின்றார்கள். ஆனால் இவர்களுடைய செலவீனங்கள் என்ன? இவர்கள் செலவிடுவதற்கு இவர்களிடம் இருக்கக்கூடியவை என்னவென்றால் Casino இருக்கின்றது. அங்கு சென்று இவர்கள் சுகபோகங்களில் செலவிடுகின்றனர். சூதாட்டங்களில் செலவிடுகின்றனர். மாறாக, முஸ்லிம் நாடுகளின் நிலைமையும் இவ்வாறுதான் இருக்கின்றது. முஸ்லிம்களின் நிலைமையும் இவ்வாறுதான் இருக்கின்றது. அவர்களும் இங்கு வந்து சுகபோகங்களுக்காக செலவிடுகின்றனர். மாறாக, இவர்களின் நாட்டில் கூட எப்படிப்பட்ட இடங்கள் இருக்கின்றது என்றால் அங்கு தாராளமாக செலவிடப்படுகின்றது.

சில நாட்களுக்கு முன்பு ஒரு பத்திரிகையைப் பார்த்தேன். அதில் ஐஸ்கிரீம் விளம்பரம் ஒன்று இருந்தது. அது துபாயிலுள்ள ஒரு ஹோட்டலின் விளம்பரமாகும். இரண்டு அல்லது மூன்று கரண்டிகளுள்ள ஒரு ஐஸ்கிரீம் கப்பின் விலை 850 டாலர்கள் ஆகும். இதில் இன்ன இடத்தினுடைய குங்குமப் பூ போடப்பட்டுள்ளது. இன்ன இடத்தினுடைய இன்ன பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மேலும், இதில் தங்க முலாம் பூசப்பட்டிருக்கின்றது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. 850 டாலர்களில் ஒரு ஏழை நாட்டின் ஒரு முழு குடும்பமும் சிறப்பான முறையில் வாழ்வைக் கழிக்கலாம். ஆனால், இந்த மக்கள் அதை ஒரு கப் ஐஸ்கிரீம் சாப்பிவதில் செலவிடுகின்றார்கள். எவர்களிடம் அளவில்லா செல்வம் இருக்குமோ அவர்களுக்கு எவ்வாறு செலவிட வேண்டும் என்பது தெரியவில்லை. மேலும், அதிலிருந்து எவ்வாறு நிம்மதியைப் பெற இயலும் என்பதும் தெரியவில்லை. சந்தேகமின்றி இவர்கள் செலவிடுகின்றார்கள்தான். ஆனால், அதனை தன்னுடைய சுகபோகங்களின் திருப்திக்காகச் செய்கின்றனர். இறைவனுடைய திருப்தியைப் பெறுவதற்காகவோ அல்லது நன்மையைப் பெறுவதற்காகவோ அல்ல. ஆனால், அல்லாஹ் கூறுகின்றான். அதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விளக்கியும் இருக்கின்றார்கள். அதாவது, உண்மையான இறையச்சம் மற்றும் ஈமான் மற்றும் இறைவனுடைய திருப்தியைப் பெறுவதற்கு ஈமானில் முன்னேறுவதற்கு இந்த வீணான விஷயங்கள் மற்றும் சுகபோகங்களில் செலவிடுவதற்குப் பகரமாக இறை படைப்பினங்களோடு அனுதாபம் மற்றும் அவர்களோடு நல்ல முறையில் நடந்து கொள்வதற்காக செலவிடுங்கள். இது இல்லையென்றால் பிறகு அல்லாஹ்வின் திருப்தியைப் பெற முடியாது. இறை படைப்பினங்களோடு அனுதாபம் காட்டுவதில் எங்கு தேவையுடையவர்களின் தேவையைக் கருத்தில் கொள்வோமோ அங்கு அவர்களது மார்க்கம் மற்றும் ஈமான் மற்றும் அவர்களை இறைவனுக்கு அருகில் கொண்டு வருவதிலும் கவனம் காட்ட வேண்டும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிம்மதி இழந்திருந்தார்கள் என்று திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கின்றது. நீர் உம்மையே அதனால் மாய்த்துக் கொள்வீரா? என்று அல்லாஹ் அவர்களிடம் கேட்கின்றான். அந்த கவலை அவர்களது நிலையைப் பார்த்துதான் அன்னாருக்கு ஏற்பட்டிருந்தது. எந்த நிலையைப் பார்த்து அன்னார் நிம்மதி இழந்திருந்தார்கள்? அந்த மக்கள் இறைவனை விட்டு தூரம் விலகிச் சென்றிருந்த அந்த நிலைமையைப் பார்த்துதான் அன்னார் நிம்மதி இழந்திருந்தார்கள். ஈமானை விட்டும் தூரம் விலகிச் சென்றிருந்ததனால் அந்நிலை ஏற்பட்டிருந்தது. அன்னார் தன்னை கஷ்டத்தில் ஏன் ஆழ்த்திக் கொண்டார்கள் என்றால், இவர்கள் எங்கு நம்பிக்கை கொள்ளாமல் இறைவனின் பிடியில் வந்து விடுவார்களோ என்பதாகும் என்ற கவலை அவர்களுக்கு இருந்தது.

ஆக, இந்தக் காலத்திலும் கூட உலகத் தேவைகளை பூர்த்தி செய்வதோடு மட்டுமின்றி அதற்காக செலவிடுவது அவசியமாகும். அத்துடன் ஏழைகளுக்கு உதவி செய்வதும் அவசியமாகும், அஹ்மதிகளாகிய நாம் ஆன்மீக தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் செல்வத்தை செலவிடுவது அவசியமானதாகும். ஏனென்றால், நேர்வழியை முழுமையடையச் செய்யக்கூடிய அந்த பணி இப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு மனித குலத்திற்காகவும் கொண்டு வந்த அந்த நேர்வழி மற்றும் எதை பரப்புவதற்கு அன்னார் (ஸல்) அவர்கள் நிம்மதி இழந்தவர்களாக இருந்தார்களோ அது முழுமையடையக் கூடிய காலம் இதுவே ஆகும். இப்போது அனைத்து வகையான வசதிகளும் இருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் எவ்வாறு இந்தப் பணி ஒப்படைக்கப்பட்டிருந்தோ அவ்வாறே அன்னாரை ஏற்றுக் கொண்டவர்–களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாங்கள் உலகை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவோம் என்று உடன்படிக்கை செய்திருப்பவர்களிடம் இது ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. பணக்காரார்கள் தங்களுடைய சுகபோகங்களில் செலவிடுகின்றனர். அளவற்ற முறையில் அவர்களிடம் செல்வம் இருக்கின்ற காரணத்தினால் அதை எவ்வாறு செலவிட வேண்டும் என்று கூட அவர்களுக்குத் தெரியவில்லை. அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்த பிறகு இந்த செல்வத்தை என்ன செய்ய வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

ஏனென்றால் அவர்களிடம் மார்க்கம் மற்றும் மனித குலத்தின் மீது அனுதாபம் காட்டுவது என்ற அம்சம் பொதுவாக காலியாகவே இருக்கின்றது. பிறகு சுகபோகங்கள் மற்றும் வீணானவைகளைத் தவிர அவர்களுக்கு வேறொன்றும் தெரிவதில்லை. ஆனால், நம்பிக்கையாளர் யார் என்றால், அல்லாஹ் கூறுகின்றான்: உண்மையான நன்மையைப் பெறுவதற்கு மேலும் அதன் விளைவாக அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெறுவதற்கு தம்மை கஷ்டத்தில் ஆழ்த்திக் கொண்டு தனக்கு பிரியமான செல்வத்திலிருந்து அவர் செலவிடுகிறார். சந்தேகமின்றி சில பணக்காரர்களும் சில தொண்டு நிறுவனங்களில் செலவிடுகின்றனர். சதகாக்கள் செய்கின்றனர். ஆனால், அவர்களுடைய செலவுகள் அவர்களுடைய வருமானத்தை ஒப்பிடும்போது மிகக் குறைவாகத்தான் இருக்கின்றன.

பிறகு, அவர்களுடைய (அந்த நன்மைகளில்) நிலையான ஒரு தன்மை இல்லை. தொடர்ந்து நன்மையான நோக்கங்களை அடைவதற்கு நன்மைகளைப் பெறுவதற்கு நம்பிக்கையாளர் மட்டுமே செலவு செய்கின்றார். மேலும், இந்தக் காலத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே நம்பிக்கையாளர்களில் எப்படிப்பட்ட ஒரு ஜமாஅத் என்றால் அது ஓர் அமைப்பின் கீழ் செலவிடுகின்றது. இஸ்லாத்தை பரப்புவதற்காக செலவிடுகின்றது. பல்வேறு வழிவகைகள் மூலமாக தப்லீகின் பணிகள் நடக்கின்றன. மனிதகுலத்தின் மீதுள்ள அனுதாப்பத்தின் காரணமாக அவர்களுடைய உரிமையைச் செலுத்தியவாறு அவர்களுக்காகவும் செலவிடப்படுகின்றது. பெரும்பாலார் எப்படிப்பட்ட மக்களாக இருக்கின்றனர் என்றால் கஷ்டத்தை சகித்துக் கொண்டு செலவிடுகின்றனர். இந்த செலவு செய்தல் அல்லாஹ்வின் நெருக்கம் மற்றும் திருப்தியைப் பெற்றுத் தரும் அதே வேளையில் சரியான வழியில் செலவிட முடியும் என்ற நம்பிக்கையில் அவர்கள் செலவிடுகின்றனர். இந்த விஷயத்தை சில அந்நியர்களும் கூட ஏற்றுக் கொள்கின்றனர். அதாவது, ஜமாஅத்தின் பொருளாதார அமைப்பு மற்றும் செலவிடுதல் மிகச்சிறப்பானதாக இருக்கின்றது என்கின்றனர்.

நம்முடைய கபாபீர் ஜமாஅத்தின் முபல்லிக் சாஹிப் ஒரு சம்பவத்தை எழுதியுள்ளார். அதாவது, ஜெரூசலம் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற இரண்டு பேராசிரியர்கள் தன்னுடைய இரண்டு நண்பர்களான வெளிநாட்டு விருந்தாளிகளோடு நம்முடைய கபாபீர் மிஷனுக்கு வந்திருந்தனர். அவர்களுடன் ஜமாஅத் பற்றி பேசக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. ஜமாஅத் அமைப்பு குறித்து அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. இந்த விருந்தினர்களில் ஆஸ்திரியா நாட்டோடு தொடர்புடைய ஒரு பேராசிரியரும் இருந்தார். அவர் இறுதியில், அஹ்மதிய்யா ஜமாஅத்தில் எனக்கு மிகவும் பிடித்த விஷயம் என்னவென்றால், உங்களுடைய ஜமாஅத்தில் பொருளாதார அமைப்பு மிகவும் தூய்மையானதாக இருக்கின்றது என்று கூறினார்.

பிறகு அவர் கூறினார்: தூய செல்வத்தால் மட்டுமே உலகில் புரட்சியைக் கொண்டு வருவது என்பது அநேகமாக உங்களது நியதியில் எழுதப்பட்டிருக்கின்றது. அதற்கு நான் உங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சந்தாவிற்கு தூய செல்வம் மிக அவசியமாகும். அல்லாஹ் இதையும் கூறியிருக்கின்றான். அதாவது, உங்களுடைய தூய செல்வத்திலிருந்து செலவிடுங்கள் என்று கூறுகின்றான். அது ஆகுமான வழிகளில் சம்பாதித்த பணமாக இருக்க வேண்டும். ஏமாற்றி சம்பாதித்ததாக இருக்கக் கூடாது. வரியிலிருந்து தப்பித்து சம்பாதித்த பணமாக இருக்கக் கூடாது அல்லது ஏதேனும் வழியில் தவறான முறையில் சம்பாதித்ததாகவும் இருக்கக் கூடாது. எனவே குறைந்தபட்சம் இது தவறான வழியில் சம்பாதிக்கப்பட்ட பணம் இல்லை என்று தெரிந்த நபர்களிடம் இருந்தே சந்தாவும் வசூல் செய்யப்படுகின்றது. அவ்வாறு தவறான வழியில் சம்பாதித்த பணமாக இருக்கின்றதென்றால் அவர்களிடமிருந்து ஜமாஅத் அமைப்பு சந்தா வாங்குவதில்லை. தெரிந்தும் கூட வாங்கப்படுகிறது என்றால் அது எனக்கு தெரிய வந்தால் எந்நிலையிலும் ஒன்று சந்தா திருப்பி ஒப்படைக்கப்படுகின்றது அல்லது அந்த பொறுப்பாளர்கள் பணி நீக்கம் செய்யப்படுகின்றார்கள்.

அசல் விஷயம் என்னவென்றால், தியாகம் செய்தவாறு வழங்க வேண்டும். மேலும், தூய செல்வத்திலிருந்து வழங்க வேண்டும் என்பதாகும். அப்போதுதான் அதில் அருள் ஏற்படுகின்றது. இது மற்றவர்களிடம் கூறப்படும்போது அந்த பேராசிரியர் கூறியதைப் போன்று மற்றவர்களும் இதனை ஏற்றுக் கொள்கின்றனர். இந்த விஷயம் அதாவது புரட்சியைக் கொண்டு வருபவர்கள் இவர்கள்தான் என்பது இந்த உலகவாதிகளுக்கும் தென்பட்டிருக்கின்றது. ஆக, நம்முடைய எண்ணங்கள் தூய்மையாக இருக்கின்ற வரை மேலும் எதுவரை நாம் தூய பணத்தைச் சம்பாதிக்க முயற்சி செய்வோமோ மேலும் அதை இறை வழியில் செலவு செய்வோமோ நிச்சயமாக அதுவரை நாம் அப்போது புரட்சியைக் கொண்டு வருவதற்குக் காரணியாக இருப்போம். இந்தப் புரட்சி நம்மிடமிருந்தே என்று விதிக்கப்பட்டிருக்கின்றது. ஏனென்றால், அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வாக்குறுதி அளித்திருக்கின்றான். நாம் ஏதேனும் உலகியல் புரட்சியைக் கொண்டு வரப்போவதில்லை. மாறாக, ஆன்மீகப் புரட்சியை உருவாக்க வேண்டியதிருக்கின்றது. பெருமானார் (ஸல்) அவர்களுடைய தூதுச் செய்தியை உலகில் எட்ட வைக்க வேண்டும். ஏகத்துவத்தை நிலைநாட்ட வேண்டியதுள்ளது. மேலும், படைப்பினங்களுக்குரிய உரிமையைச் செலுத்த வேண்டியதுள்ளது. இது மனிதனால் நடக்கக்கூடிய விஷயங்களல்ல. மாறாக, அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கலப்பற்ற உள்ளத்தால் நேசம் கொள்ளக்கூடிய ஒரு கூட்டத்தை உமக்கு வழங்குவேன் என்று வாக்குறுதி அளித்திருக்கின்றான். அவர்கள் இந்தப் பணியைச் செய்வார்கள். அவர்கள் அன்னாரின் பணியை முழுமைபடுத்துவதற்கு எல்லா வகையான தியாகங்களையும் செய்ய ஆயத்தமாக இருப்பார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது ஜமாஅத்தின் விசுவாசத்தைக் குறிப்பிட்டவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்கள் எத்தகைய உண்மை மற்றும் நன்றியுணர்வின் முன்மாதிரியை வெளிப்படுத்திகாட்டினார்களோ அதற்கு இணையான ஒன்றை உலக வரலாற்றில் நாம் பார்க்க முடியாது. அவர்கள் அன்னாருக்காக எல்லா வகையான துக்கங்களையும் சகித்துக் கொள்வதை எளிதாகக் கருதினார்கள். எதுவரையென்றால் நேசத்திற்குரிய நாட்டைத் துறந்தார்கள். தன்னுடைய சொத்துக்கள், செல்வங்களை விட்டுப் பிரிந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: இதே போன்ற நிலையை அல்லாஹ் என்னுடைய ஜமாஅத்திற்கும் வழங்கியுள்ளான். சஹாபாக்களின் தரம் மிகவும் உயர்வானதாக இருந்தது. ஆனால், இந்தக் காலத்திலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கைகளில் பைஅத் செய்த சஹாபாக்களுடைய அந்தஸ்தும் மிக உயர்வானதாக இருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள் : அந்த கண்ணியம் மற்றும் அந்தஸ்திற்கு ஏற்ப அவர்களுக்கு ஓர் உத்வேகம் வழங்கப்பட்டிருக்கின்றது. அதன் காரணமாக அவர்கள் விசுவாசம் மற்றும் உண்மையினுடைய முன்மாதிரியை காட்டுகின்றனர். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 336-337; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு ஜமாஅத்தின் பொருள் தியாகத்தைப் பற்றி அன்னார் கூறுகின்றார்கள்: என்னுடைய மார்க்க நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக எப்போதும் மக்கள் மனம் திறந்து சந்தாக்களை வழங்கி இருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒவ்வொரு நபரும் குறைந்தபட்சம் தன்னுடைய வசதி வாய்ப்புகளுக்கேற்ப வழங்குகின்றனர். அவர்கள் எப்படிப்பட்ட கலப்பற்ற தன்மை மற்றும் விசுவாசத்தோடு இந்த சந்தாக்களின் திட்டத்தில் பங்கெடுக்கின்றார்கள் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நம்முடைய ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் எப்படிப்பட்ட உண்மை மற்றும் நன்றியுணர்வைக் காட்டி இருக்கின்றனர் என்றால் அது கஷ்டமான காலத்தில் சஹாபாக்கள் காட்டிய அதே உண்மை மற்றும் நன்றியுணர்வைப் போன்றதாகும் என்பதை நான் நன்கு அறிவேன். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 338; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஒரு சந்தர்ப்பத்தின் போது அன்னார் ஜமாஅத் சகோதரர்களின் தியாகத்தின் தரத்தைக் குறிப்பிட்டவாறு இந்த வியப்பையும் வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். அதாவது, எவ்வாறு இந்த மக்கள் தியாகங்களைச் செய்கின்றனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னை ஏற்றுக் கொண்டவர்களிடம் எப்படிப்பட்ட ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் அவர்கள் உலக ஆசைகளை முதுகுக்குப் பின்னால் போட்டு விட்டு மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கக்கூடியவர்களாக இருந்தனர். ஆனால், அன்னார் தன்னை ஏற்றுக் கொண்டவர்களிடம் உருவாக்கி இருந்த தியாகத்தின் ஆன்மா அதாவது அன்னாரிடம் நேரடியாக அன்னாரின் கைகளில் பைஅத் செய்தவர்களிடம் உருவாக்கி இருந்த தியாகத்தின் ஆன்மா இப்போது இல்லையா? அப்போது மட்டும்தான் இருந்ததா? அவ்வாறு இருந்திருந்தால் அல்லது அவ்வாறு இருக்கிறது என்றால் ஜமாஅத்தின் பாதங்கள் முன்னேற்றம் அடையக் கூடியதாக ஒருபோதும் இருந்திருக்காது. மேலும், முன்னேற்றத்தின் பக்கம் எழுந்திருக்கவும் செய்யாது. அல்லாஹ் அன்னாரிடம் உனக்கு உலகின் எல்லை வரை கண்ணித்தோடு புகழைத் தருவேன் என்றும் வாக்குறுதி அளித்திருந்தான். அதற்காக கலப்பற்ற தன்மையுடைய தியாகங்களைச் செய்யக்கூடிய ஜமாஅத்தின் தேவையும் இருந்தது. இவ்வாறு அன்னார் இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று அன்னாருக்குப்

**சுத்தமான தேன் கிடைக்கும்**

**ஆரோக்கியமான வாழ்விற்கு தேனியியல் மருந்து *(Honey Medicine)* கிடைக்கும்.**

**Dr. M.J. அக்பர் அலி**

B.Com., M.A., B.Ed., PGD Y&N, RMP (Homeo)

Institute of Honey bees' Medicine Education Research & Sales
101 B/1, First Floor, Nethaji Road, Melapalayam,
Tirunelveli - 627 005 Ph : +91 95006 62284

## திருக்குர்ஆனிலிருந்து

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)

**A. பஷீர் அஹ்மது**

வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். Ph : +91 98437 22215

பிறகு கிலாஃபத் அமைப்பு தொடரும் என்ற நற்செய்தியையும் வழங்கியிருந்தார்கள். அது அன்னாரது பணியை முழுமையடையச் செய்யும். அத்துடன் இணைந்து கலப்பற்ற தன்மையுடையவர்கள் இப்பணியைச் செய்வார்கள். நாம் இன்று அல்லாஹ் தன்னுடைய வாக்குறுதிகளை எவ்வாறு பூர்த்தி செய்து கொண்டிருக்கின்றான் என்பதைப் பார்க்கின்றோம். தூய உள்ளம் கொண்டவர்களின் ஒரு ஜமாஅத் இருக்கின்றது. அவர்கள் கிலாஃபத்தோடு இணைந்து உயிர், பொருள் மற்றும் காலத்தை தியாகம் செய்கின்றார்கள். நான் இன்று தஹ்ரீகே ஜதீதின் புதிய ஆண்டிற்கான அறிவிப்பையும் செய்வேன். எனவே, தியாகம் செய்யக்கூடிய ஒரு சிலருடைய சம்பங்களையும் கூறுவேன். அவைகள் பொருள் தியாகத்தோடு தொடர்புடையவையாகும். பணக்கார நாடுகளில் மட்டுமின்றி ஏழை நாடுகளிலும் இன்னும் சொல்வதென்றால், முற்றிலும் புதிதாக இணைந்த அஹ்மதிகளும் கூட அதாவது அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அல்லாஹ் அவர்களது உள்ளத்தை எவ்வாறு திருப்புகின்றான். கஷ்டம் இருந்தும் கூட அவர்கள் பொருள் தியாகத்தில் எவ்வாறு முன்னேறுகின்றார்கள் என்பதைப் பற்றி கூறுவேன்.

கினிகனாகிரியின் முபல்லிக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: இங்கு சோம்பியாபி என்ற ஒரு ஜமாஅத் உள்ளது. அந்த ஜமாஅத்தின் பள்ளிவாயிலின் இமாம் தங்களுடைய பள்ளிவாயிலோடு இந்த வருடம் ஜமாஅத்தில் இணைந்தார்கள். அவர்களுக்கு ஜமாஅத்தின் பொருளாதார அமைப்பு மற்றும் தஹ்ரீகே ஜதீதின் முக்கியத்துவம் பற்றி கூறப்பட்டபோது நானும் சந்தா வழங்குதல் மற்றும் ஸக்காத் வழங்குதல் தொடர்பாக உரைகளை நிகழ்த்தி வந்துள்ளேன். இதேபோன்று உறுதியான மற்றும் முழுமையான பொருளாதார அமைப்பை நான் வேறு எங்கும் கண்டதில்லை என்றும், இதுபோன்ற அமைப்பு பற்றி இதற்கு முன்னர் வேறு எங்கும் கேட்டதில்லை என்றும் கூறினார். அதே வேளையில் அவர் சந்தாவையும் செலுத்தினார். மேலும், இனி ஒவ்வொரு மாதமும் எங்களுடைய முழு ஜமாஅத்தும் சந்தாவை வழங்கி வரும் என நான் வாக்குறுதி அளிக்கிறேன் என்றும் கூறினார். இவர்கள் ஏழ்மையான பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர். ஐரோப்பாவில் இருக்கக் கூடிய இவர்கள் வறுமைக்கோட்டிற்கும் மிகவும் கீழ் இருக்கக்கூடிய மக்களை விட மிகவும் கீழ்நிலையிலுள்ள மக்கள் ஆவர். ஆனால், தியாகத்தில் எல்லாரையும் விட உயர் தரத்தில் இருக்கின்றனர்.

பிறகு, இது ஒரு நாட்டில் மட்டும் நடந்ததல்ல. மாறாக, இந்த காற்று உலகின் பல்வேறு நாடுகளிலும் வீசுகின்றது. முதலில் கினிகனாகிரி பற்றி கூறப்பட்டது.

இப்போது ஐவரிகோஸ்ட்டின் முபல்லிக் சாஹிபும் எழுதுகின்றார்: நாங்கள் தப்லீகிற்காக குபிங்கே என்ற ஒரு கிராமத்திற்குச் சென்றோம். அவர்களுக்கு ஜமாஅத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்தோம். அனைத்து ஆண்களும் பெண்களும் எங்களது தப்லீகை கூர்ந்து கேட்டனர். ஒரு நண்பர், இதற்கு முன்னரும் ஏராளமானோர் இங்கு தப்லீகிற்காக வந்துள்ளனர். ஆனால் இதுபோன்ற அழகிய தூதுச் செய்தியை இதற்கு முன்பு நாங்கள் கேட்டதில்லை என்று கூறினார். அதற்குப் பிறகு ஏறக்குறைய 300 பேர் அதே வேளையில் ஜமாஅத்தில் இணைந்தனர். அதற்குப் பிறகு அவர்களுக்கு ஜமாஅத்தின் பொருளாதார அமைப்பு மற்றும் தஹ்ரீகே ஜதீது பற்றி கூறப்பட்டது. அவ்வாறு பேசிக் கொண்டிருந்தபோதே இன்று தஹ்ரீகே ஜதீது நிதியாண்டின் இறுதி நாள் என்ற பேச்சும் வந்தது. அதைக் கேட்டதும் கிராமத்தின் Chief மற்றும் இமாம் கிராமவாசிகளிடம் நாங்கள் இன்றுதான் அஹ்மதிய்யத்தில் இணைந்திருந்தாலும் எந்நிலையிலும் இந்த அருளுக்குரிய திட்டத்தில் இணைவோம் என்று கூறினார். அவ்வாறு கிராமவாசிகள் உடனடியாக 10,000 ஃபிராங்கை ஒன்று சேர்த்து அதை சந்தாவாக வழங்கி தஹ்ரீகே ஜதீதில் இணைத்தனர்.

பிறகு, தியாகத்தின் இன்னொரு சம்பவம் ஆப்ரிக்காவின் இன்னொரு நாடு தன்ஸானியாவில் நடந்ததாகும். அங்கு மவான்ஸா மண்டலத்தில் ஒரு நண்பரின் தஹ்ரீகே ஜதீதின் வாக்குறுதி 2 இலட்சம் ஷிலிங் ஆகும். அதில் அவர் ஒரு இலட்சம் ஷிலிங்கை செலுத்தியிருந்தார். ஒரு இலட்சம் பாக்கி இருந்தது. அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அக்டோபரில் உங்களுக்கு ஒரு இலட்சம் ஷிலிங் பாக்கி இருக்கிறது. மேலும் தஹ்ரீகே ஜதீதின் ஆண்டு முடியப் போகிறது என்று அவருக்கு கவனமூட்டப்பட்டது. அதற்கு அவர் இப்போது நான் பயணத்தில் இருக்கின்றேன். ஆனால், நான் ஏதேனும் ஏற்பாடு செய்கின்றேன் என்று கூறினார். அவர் ஒரு பேருந்து ஓட்டுனரின் கையில் இந்த தொகையை கொடுத்து அனுப்பினார். மேலும் அவரிடம் இது என்னுடைய சந்தாவாகும். இதை செலுத்துவது மிகவும் அவசியமாகும். அங்கு சென்றடைந்தவுடன் இந்த தொகையை முஅல்லிமிடம் கொடுக்க வேண்டும் என்று கூறி பெயர் மற்றும் அவருடைய முகவரியையும் வழங்கினார். ஆக, அந்த பேருந்து ஓட்டுனர் பேருந்து நிலையத்தை அடைந்தவுடனேயே முஅல்லிம் சாஹிப் அவர்களுக்கு ஃபோன் செய்து உங்களுடைய அமானிதம் என்னிடம் இருக்கின்றது. அதை வந்து பெற்றுச் செல்லுங்கள் என்று கூறினார். முஅல்லிம் சாஹிப் சந்தா வாங்கச் சென்ற போது ஓட்டுனர் முஅல்லிம் சாஹிபிடம் நானும் அஹ்மதியாக விரும்புகிறேன் என்று கூறினார். அந்த பேருந்து ஓட்டுனரின் மனைவி மக்கள் முன்னரே அஹ்மதியாகி இருந்தனர். இவருக்கு திருப்தி ஏற்படாத காரணத்தினால் இவர் அஹ்மதியாகாமல் இருந்தார். அவர் கூறினார்: மனிதன் செல்வத்தை அதிகமாக நேசிக்கின்ற இந்த பௌதீக காலகட்டத்தில் அதிலும் நாம் மிகவும் ஏழ்மையான பகுதியைச் சார்ந்தவர்களாக இருந்தும் கூட அல்லாஹ்வின் பாதையில் செல்வத்தை வழங்கி உண்மையான மகிழ்ச்சி மற்றும் நிம்மதியைப் பெறுகின்ற மக்களை அல்லாஹ் உருவாக்கி இருக்கின்றான் என்கின்ற இந்த விஷயம் என்னை மிகவும் தாக்கத்திற்கு ஆளாக்கி இருக்கின்றது.

இவ்வாறு பேருந்து ஓட்டுனர் மூலமாக தன்னுடைய சந்தாவை வழங்கிய அந்த அஹ்மதி நண்பர் சந்தா வழங்கியது இந்த அஹ்மதி அல்லாதவரையும் கூட அஹ்மதிய்யத்தில் இணைய வைத்தது. ஆக, இதுவே நல்லெண்ணத்தில் கொடுக்கப்பட்ட சந்தாக்களாகும். அதன் விளைவுகள் உடனடியாக வெளிப்படுகின்றன. விருப்பத்திற்குரிய செல்வத்திலிருந்து வழங்கப்பட்ட இந்த பொருள் தியாகம் ஒரு நல்லியல்பு கொண்டவரின் சீர்திருத்தத்திற்குக் காரணமாக ஆகி விட்டது. இவ்வாறு அல்லாஹ் கனிகளை வழங்கும் பல்வேறு வழிவகைகளைக் கையாளுகின்றான்.

இதேபோன்று செனிகலின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: எங்களுடைய ஜமாஅத்தின் ஓர் உறுப்பினர் உமர் சாஹிபின் தந்தை அஹ்மதி அல்லாதவராக இருந்தார். கினிகனாகிரியிலிருந்து மிகவும் நோயுற்ற நிலையில் இங்கு வந்திருந்தார். ஆரம்ப மருந்துகள் மற்றும் பரிசோதனைகளுக்குப் பிறகு டாக்டர்கள் பிராஸ்டேடிற்கான ஆப்ரேஷன் செய்ய வேண்டுமென கூறினர். ஆனால், உமர் சாஹிபிடம் தனது தந்தையாருக்கு ஆபரேஷன் செய்யும் அளவிற்கு பணம் இல்லை. மேலும் இவ்வளவு பெரிய தொகையைக் கடனாகப் பெறுவதும் கடினமான ஒன்றாக இருந்தது. மிகவும் குழம்பி இருந்தார்கள்.

கூறுகிறார்: அக்டோபர் மாதத்தின் முதல் வாரம் ஆரம்பமானது. ஜுமுஆ குத்பாவில் நான் தஹ்ரீகே ஜதீது தொடர்பாக கவனமூட்டியபோது அடுத்த நாள் உமர் சாஹிப் மிஷன் ஹவுஸ் வந்து என்னுடைய தஹ்ரீகே ஜதீது சந்தா ரசீதை போடுங்கள் என்று கூறினார். அமீர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள். எனக்கு அவருடைய நிலைமை தெரிந்திருந்த காரணத்தால் உங்களுடைய நிலைமை கஷ்டமானதாக இருக்கின்றது. உங்களுடைய தந்தையார் நோயுற்று இருக்கின்றார்கள். நீங்கள் எவ்வாறு இப்போது இந்த தியாகத்தை செய்வீர்கள் என்று கூறினேன். அதற்கு அவர் நேற்று நீங்கள் ஆற்றிய குத்பாவில் அல்லாஹ்வோடு வியாபாரம் செய்ய வேண்டும் என்று கூறினீர்கள். நான் அல்லாஹ்வோடு வியாபாரம் செய்ய வந்துள்ளேன். எனவே, நீங்கள் எனக்கு ரசீது போடுங்கள் என்று கூறினார். இவர்கள் கூறுகிறார்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகு நான் அவர்களுடைய தந்தையை நலம் விசாரிக்க அவர்களது வீட்டிற்குச் சென்றபோது அவர்களுடைய தந்தையார் வெளியே நாற்காலியில் அமர்ந்திருந்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு உமர் சாஹிப் வந்து என்னுடைய வியாபாரம் வெற்றி அடைந்து விட்டது. அல்லாஹ்வின் அருளால் தந்தையார் முற்றிலும் நலமாக இருக்கின்றார்கள். கடுகளவு கூட வேதனை இல்லை என்று கூறினார். சிறிது காலத்திற்குப் பிறகு மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு இப்போது அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய தேவையே இல்லை என்று கூறினார்கள். இந்த சம்பவத்திற்குப் பிறகு அவருடைய தந்தையாரும் பைஅத் செய்து விட்டார். ஆக, சில வேளைகளில் அல்லாஹ் இதுபோன்ற வியாபாரங்களை செய்கின்றான்.

கடந்த வாரம் பள்ளி திறப்பு விழாவின்போதும் இங்குள்ள ஒரு மனிதரைப் பற்றி கூறியிருந்தேன். எவ்வாறு அவர் பள்ளிவாயிலுக்கு தொண்டாற்றுவதற்கு முக்கியத்துவம் வழங்கினார். அல்லாஹ் அசாதாரணமான முறையில் அவருக்கு ஒரு பெரிய தொகையைக் கிடைக்கச் செய்தான். ஓர் உலகவாதி அநேகமாக இதனை தற்செயலாக நடந்த ஒரு நிகழ்வாகக் கருதலாம். ஆனால், இறைவன் மீது நம்பிக்கை கொள்ளக்கூடியவர் இது அல்லாஹ்வின் அருளாலேயே நடந்தது என்று நம்புகிறார்.

இதேபோன்று கான்கோ பன்ச்சாஷாவிலுள்ள கோண்டா ஜமாஅத்தைச் சார்ந்த அய்யூப் சாஹிப் குகும் டோலோ கூறுகிறார்: நான் முதலில் ஜமாஅத் பணிகளில் பங்கெடுத்தது கிடையாது. என்னுடைய மகன் எப்போதும் நோய்வாய்ப்பட்டுக் கொண்டேயிருந்தார். அவனுடைய சிகிச்சைக்காக பெரிய தொகை செலவாகியது. கூறுகிறார்: பிறகு எனக்கு உள்ளூர் செயற்குழுவில் செகரட்டரி மாலாக தொண்டாற்றக்கூடிய வாய்ப்பு வழங்கப்பட்டது. அப்போது நான்

## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப் பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

ஜலாலுத்தீன்
ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.
Ph : +91 98409 17179

O.A.N. DOORS & STEELS
O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்
*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*
Ambai Road, (Opp. Karuna Clinic), Kulavanikarpuram, Tirunelveli - 627 005
O.A. NIJAM - 99947 571772 V.A. SAIT - 99430 30230

செகரட்டரி மாலாக நியமிக்கப்பட்டிருக்கின்றபோது என்னுடைய பொருள் தியாகம் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன்.

பாருங்கள்! தொலை தூரத்தில் இருக்கக்கூடிய ஒரு நாட்டில் வசிக்கக்கூடிய ஓர் ஏழை மனிதருக்கு இந்த சிந்தனை வருகின்றது. அதாவது, நான் செகரட்டரி மாலாக நியமிக்கப்பட்டுள்ளேன் என்றால் என்னுடைய தியாகத்தின் தரம் மற்றவர்களை விட சிறந்ததாக இருக்க வேண்டும் என எண்ணுகிறார். கூறுகிறார். நான் முறையாக சந்தா செலுத்தி வர ஆரம்பித்து விட்டேன். சந்தாவின் அருளால் என்னுடைய நிலைமையும் நன்றாக ஆக ஆரம்பித்தது. வாழ்க்கை நிம்மதியானதாகவும் மகிழ்ச்சியானதாகவும் ஆனது. என்னுடைய மகனும் அல்லாஹ்வின் அருளால் பாதுகாப்பாக இருக்கின்றான். இவை அனைத்தும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றியது மற்றும் பொருள் தியாகத்தின் விளைவாகவே ஆகும் என்று நான் கருதுகிறேன் எனக் கூறினார்.

வயிற்றைக் கட்டி தியாகம் செய்தல் என்கின்ற ஒரு பழமொழி இருக்கின்றது. ஆனால், இதன் உண்மைத்தன்மை வரை இதுபோன்ற சில சம்பவங்கள் நம்முன் வராத வரை மனிதன் சென்றடைய முடியாது. ஏழைகளின் தியாகத்தின் தரத்தை பார்க்கும்போது இவை நம்முன் வருகின்றன. கேம்பியாவைச் சார்ந்த ஒரு பெண்மணி அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். அங்குள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர். அவரிடம் தஹ்ரீகே ஜதீத் தொடர்பாக கூறப்பட்டபோது என்னுடைய வீட்டில் அரிசி வாங்குவதற்காக 100 டலாசி மட்டுமே இருக்கின்றது. அரிசி முற்றிலும் முடிந்து விட்டது என்றார். மேலும், அந்த பெண்மணி எங்களுடைய வீட்டிற்கு உதவி செய்து வந்து என்னுடைய ஒரே மகன் 2 வருடங்களாக காணாமல் போய் விட்டார். 2 வருடங்களாகக் காணாமல் போய் விட்டதால் அவர் மரணித்து இருப்பார் என மக்கள் கூறுவதாகவும் அவர் கூறினார். ஆனால் அத்தோடு நான் சமாளித்துக் கொள்வேன். உண்பதற்கு வேறு எங்குமிருந்தும் பெற்றுக் கொள்வேன். இந்த தொகையை தஹ்ரீகே ஜதீது சந்தாவில் பெற்றுக் கொள்ளுங்கள். அல்லாஹ் தானே எனக்கான ஏற்பாட்டைச் செய்வான் என்றும் கூறினாள்.

இந்த சம்பவத்திற்கு 3 நாட்களுக்குப் பிறகு 2 ஆண்டுகளாக காணாமல் போன அந்த மகன் திரும்பி வந்து விட்டான். மேலும், தன்னோடு 10 மூட்டை அரிசியையும் ஒரு பெரும் தொகையையும் கொண்டு வந்தான். அந்தப் பையன் காணாமல் போயிருந்த அந்த காலகட்டத்தில் கட்டுமானப் பணி தொடர்பான பணியைக் கற்று வந்ததாகவும் இப்போது நகரத்தில் பெரிய பெரிய குத்தகைகள் அவனுக்கு கிடைக்க ஆரம்பித்து விட்டதாகவும் கூறினான். அப்போது இந்த பெண்மணி இது நான் அப்போது செய்த பொருள் தியாகத்தின் அருளே ஆகும் என்றும் மேலும் எப்போதும் நான் இதில் பங்கு பெறுவேன் என்றும் கூறினார்கள்.

தொலை தூரத்தில் இருக்கக்கூடிய மக்களிடம் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதன் விளைவாக ஏற்படுத்தியிருக்கின்ற இது புரட்சியில்லையா? நிச்சயமாக புரட்சியாகும். இந்த பெண்ணின் ஈமானின் நிலை எந்த அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதைப் பாருங்கள். அவர் தனது பசியை பொருட்படுத்தவே இல்லை. பிறகு அல்லாஹ் அந்தப் பெண்மணியோடு நடந்து கொண்ட விதமும் வியக்கத்தக்கதாகும்.

மாலியிலிருந்து முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்: ஏறக்குறைய 80 வயதுடைய ஓர் அஹ்மதி பெண்மணி முறையாக சந்தா செலுத்தி வந்தார்கள். ஒரு நாள் வீட்டிலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மிஷன் ஹவுஸிக்கு நடந்தே வந்தார். வெப்பத்தின் காரணமாக அவருடைய நிலைமை மிக மோசமாக இருந்தது. அந்த நாடுகளில் அதிகமாக வெப்பம் நிலவுவதுண்டு. அதற்கு அந்த முபல்லிக் நீங்கள் என்னிடம் கூறி இருந்தால் நானே வந்து சந்தாவை வாங்கி இருப்பேனே என்று கூறினார். அதற்கு அந்தப் பெண்மணி பொருள் தியாகம் பற்றி எனக்கு தெரிய வந்ததிலிருந்து அதாவது இதன் முக்கியத்துவம் என்ன என்பது பற்றி தெரிய வந்த போது இந்த நற்கூலியை நான் வீணாக்க விரும்பவில்லை. ரிக்ஷாவில் செலவாக வேண்டியிருந்த அந்த பணத்தையும் சந்தாவாக வழங்க வேண்டும் என்பதற்காகவே நடந்து வந்தேன் என்று கூறினார்கள்.

ஆக, இதுவே தொலை தூரத்தில் இருக்கக்கூடிய மக்களின் தரமாகும். அல்லாஹ் அஹ்மதிகளின் ஈமானை சுய அனுபங்களைக் கடந்து செல்ல வைத்து அதற்கு உறுதித்தன்மையை ஏற்படுத்துகின்றான். அது எல்லா நிலைமைகளிலும் வெளிப்படுகின்றது.

பெனினுடைய முஅல்லிம் ஸகரிய்யா சாஹிப் ஒரு சம்பவத்தை எழுதுகின்றார்: சின்றி போத்தா என்கின்ற ஜமாஅத்தினுடைய தலைவரின் பணி பறி போனது. அதன் காரணமாக அவர் மிகவும் குழம்பி இருந்தார். அந்த நாட்களில் தான் அவருக்கு தஹ்ரீகே ஜதீது தொடர்பாக நினைவூட்டப்பட்டது. சில நாட்களுக்குப் பிறகு என்னிடம் சந்தா தொடர்பாக கவனமூட்டப்பட்ட பிறகு நான் இறைவனிடம் என்னுடைய தஹ்ரீகே ஜதீது சந்தாவை செலுத்துவதற்கான ஏதேனும் வழிவகையை எனக்கு திறந்து தருவாயாக! என்று துஆ செய்தேன். அவர் இரவும் கூட மிகவும் நிம்மதியிழந்த நிலையிலேயே கழித்துள்ளார். காலையில் ஃபஜ்ர் தொழுகையை தொழுது முடித்து விட்டு வேலை தேடி பக்கத்து கிராமத்திற்கு சென்றேன். அங்கு எனக்கு எந்த வேலையும் கிடைக்கவில்லை. ஆனால், ஒரு மனிதன் தனது கால்நடைகளை விற்பதற்காக எங்கோ சென்று கொண்டிருந்தார். நான் அவருக்கு உதவி செய்தேன். அவர் எனக்கு 500 ஃபிராங்க் வழங்கினார். அவர் கூறுகிறார்: இந்த பைசாவில் 200 ஃபிராங்கிற்கு சில உண்பதற்கான பொருட்களை வாங்கினேன். 100 ஃபிராங்குகளை பள்ளிக்கு செல்லும் தனது குழந்தைக்கு வழங்கினார். 200 பிராங்க் சந்தாவாக செலுத்தி விட்டார். கூறுகிறார்: இந்த ஒரு எளிய தியாகத்திற்கு பகரமாக அல்லாஹ் எந்த அளவிற்கு அருள் செய்தான் என்றால் சந்தா கொடுத்த நான்கு நாட்களுக்குப் பிறகு இவருக்கு பணி கிடைத்து விட்டது. மேலும் இவ்வளவு விரைவில் மட்டும் இவருக்கு தகுந்த வேலை கிடைப்பது தற்செயலாக நடத்ததல்ல. மாறாக, இறைவனுடைய குறிப்பான அருளால் நடத்ததாகும் என்று கூறுகிறார்.

இவை ஆப்பிரிக்காவில் நடந்த சம்பவங்களாகும். இந்தியாவிலிருந்தும் இன்ஸ்பெக்டர் தஹ்ரீகே ஜதீது எழுதுகிறார்: ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களுடைய தஹ்ரீகே ஜதீது இன்ஸ்பெக்டர் ஷஹாபுத்தீன் சாஹிப் எழுதுகின்றார். ஹைதராபாத்தின் ஒரு நண்பர் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர். 20,000 –ஐக் கொண்டு அவர் தொழில் நடத்த ஆரம்பித்தார். ஒரு சிறிய கடை நடத்துகிறார். தொழுகை நேரம் வரும்போது அவர் கடையை மூடி விடுவார். இதுவே உண்மையான நம்பிக்கையாளரின் அந்தஸ்து ஆகும். அதாவது தொழுகை நேரம் வந்ததும் அவர் வியாபாரத்தை நிறுத்தி விடுவார்.

அவர் கூறுகிறார்: வருடத்தில் ஒரு மாதத்தின் முழு வருமானத்தை தஹ்ரீகே ஜதீது சந்தாவாக வழங்கி வருகிறார். இந்த வருடமும் அவர் 60,000 ரூபாய் தஹ்ரீகே ஜதீது சந்தாவாக வழங்கினார். வாடகை வீட்டில் வசித்து வருகிறார். ஒரு நாள் நான் அவரிடம் நீங்கள் சொந்த வீடு ஏன் வாங்கக் கூடாது எனக் கேட்டேன். அதற்கு கூறினார். எப்படி போகிறதோ போகட்டும். உலகம் எவ்வாறு அழிவின் பக்கம் செல்கிறது என்றால் சொத்து சேர்ப்பதற்கு பகரமாக அல்லாஹ்வின் வழியில் செலவிடவே வேண்டும் என்று கூறினார்.

இதேபோன்று பாகிஸ்தானிலிருந்து நாயிப் வகீலுல் மால் எழுதுகின்றார்கள்: அவர் சியால்கோட்டினுடைய ஓர் இளைஞரை சந்தித்தார். அவருடைய வாக்குறுதி 15,000 ஆக இருந்தது. அவரிடம் 15,000 –லிருந்து அதிகரித்து ஓர் இலட்சமாக உங்களது வாக்குறுதியை எழுதுங்கள் என்று கூறினேன். அவர் ஓர் இலட்சமாக தனது வாக்குறுதியை ஆக்கி விட்டார். அவர் காலணிகளை ஏற்றுமதி செய்யக்கூடிய ஒரு தொழிலை ஆரம்பித்தார். அவர் கூறுகிறார்: ஆரம்பத்தில் அவர் 5000 சந்தா கொடுத்தார். பிறகு 10,000 ஆக்கினார். பிறகு 15,000 மாக அதிகரித்தார், 15,000 –லிருந்து ஓர் இலட்சமாக அதிகரித்தார். கூறுகிறார்: சந்தாவின் அருளால் எந்த தொழிற்சாலைக்கு வாடகை கொடுத்து வந்தாரோ அந்த தொழிற்சாலையை அவரே வாங்கி விட்டார். தொழிலும் மிகச் சிறப்பாக ஆகி விட்டது.

இதேபோன்று இந்தோனேஷியாவிலிருந்து நமது முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்: அங்குள்ள ஒரு மனிதர் என்னிடம் மோட்டர் சைக்கிள் இருந்தால் என்னுடைய மகனோடு வந்து ஜுமுஆ தொழுவதற்கு எளிதாக இருக்கும் என்று கூறினார். நம்முடைய முபல்லிக் அவரிடம் துஆ செய்யுங்கள். மேலும் சந்தாவை முறையாக செலுத்தி வாருங்கள் என்று கூறினார். அதற்குப் பிறகு அவர் தஹ்ரீகே ஜதீது சந்தா வழங்க ஆரம்பித்து விட்டார். கூறுகிறார்: சிறிது காலத்திலேயே அல்லாஹ் அருள் செய்தான். மேலும், மோட்டர் சைக்கிள் வாங்குவதற்கான நல்வாய்ப்பு கிடைத்து விட்டது. இப்போது அவரது வீட்டில் ஒன்றிற்கு பகரமாக மூன்று மோட்டார் சைக்கிள் இருக்கின்றது. அவர் வஸிய்யத்தும் செய்து விட்டார். அவரது வருமானமும் அதிகமாகி விட்டது.

இங்கு கனடாவிலும் சிலர் அவ்வாறு இருக்கின்றனர். அமீர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: சிலரது சந்தாக்கள் 1000 டாலராக இருந்தது. அதை அதிகரித்து 5000 டாலராக எழுதினர். அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பதற்காக அதை ஆரம்பத்திலேயே வழங்கியும் விட்டனர். பள்ளிவாசலுக்காகவும் 20000 டாலர்களை வழங்கினர். இதே போன்று இங்கும் ஒரு சில ஈமானை வலுவூட்டக்கூடிய சம்பவங்கள் உள்ளன.

ஒரு பெண்மணி கூறுகிறார்: என்னுடைய வாக்குறுதி 1000 டாலர்களாக இருந்தது. பைசா இல்லாமல் இருந்தது. மாலை வேளையில் கணவருடைய ஃபோன் வந்தது. அவர் இன்ன நபர் எனக்கு பைசா தந்துள்ளார் எனக் கூறினார். நான் அவரிடம் 1000 டாலருக்கான காசோலையாகத்தானே இருக்கும் எனக் கேட்டேன். அதற்கு அவர் உனக்கு எப்படி தெரிந்தது என்று கேட்டார். ஏனென்றால் தஹ்ரீகே ஜதீது சந்தா கொடுக்க வேண்டுமே என்ற கவலையுடன் இருந்தேன். 1000 டாலர் பாக்கி இருந்தது. அல்லாஹ் அதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கின்றான் என்ற எண்ணம் தோன்றியது.

ஐரோப்பிய நாடுகளில் புதிய ஜமாஅத்துகள் உருவாகிக் கொண்டு இருக்கின்றன. மைக்ரோ மேஷியாவின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்: ஏழ்மையின் காரணமாக வேலை வாய்ப்புகள் மிகவும் குறைவாக உள்ளது. வருமானத்திற்கான எந்த வழிவகைகளும் இல்லாத மக்களின் எண்ணிக்கை கணிசமானதாக உள்ளது. இவர்களுக்கு தங்களுடைய உறவினர்களிடமிருந்து ஏதேனும் உதவி கிடைக்கிறது அல்லது ஒன்றிரண்டு நாள் வாழ்வை கழிக்கக்கூடிய பணிகள் கிடைக்கின்றன. ஒரு அதிக வயதுடைய அஹ்மதி நண்பர் இருந்தார். அவருக்கு ஜமாஅத் பணிகள் செய்யும் ஆர்வம் உடையவர். ஏறக்குறைய அவர் தனது அனைத்து நேரங்களையுமே ஜமாஅத்தின் பணிகளுக்காகவே செலவிடுவார். ஜமாஅத்திற்காக வேலை செய்யா விட்டாலும் கூட ஏதேனும் ஒரு வேலை மூலமாக ஜமாஅத்திற்கு பலன் கிடைக்க வேண்டும் என்று முயற்சி செய்து வருவார். ஏறக்குறைய ஒரு வருடமாக காலியான கேன்களை ஒன்று சேர்த்து வந்தார். அதை Recycling செய்பவர்களுக்கு கொடுத்து அதிலிருந்து பணம் பெற வேண்டும் என்பதற்காக அவ்வாறு சேர்த்து வந்தார். வருடம் முழுவதும் கேனை ஒன்று சேர்த்தார். அதை Recycling செய்பவர்களுக்கு கொடுத்தார். இந்த பணிக்கு அவருக்கு 30 டாலர்கள் மட்டுமே கிடைத்தது. அதை பெற்றுக் கொண்டு

நேராக மிஷன் ஹவுஸிற்கு வந்து 10 டாலர்களை சந்தாவாக கொடுத்து விட்டார். என்னுடைய தஹ்ரீகே ஜதீதின் வாக்குறுதி பாக்கி இருந்தது. அதை செலுத்தினேன் என்று கூறினார். மேலும் வருடம் முழுவதும் செய்யும் உழைப்பில் மூன்றில் ஒரு பங்கை ஜமாஅத்திற்கு கொடுத்தார்.

ஜெர்மனியிலிருந்து தஹ்ரீகே ஜதீது செயலர் எழுதுகின்றார்: ஒரு பெண்மணி அவர் தனது பெயரை கூறவில்லை. தஹ்ரீகே ஜதீது அலுவலகத்திற்கு வந்து தனது அனைத்து நகைகளையும் தஹ்ரீகே ஜதீது சந்தாவிற்காக கொடுத்து விட்டார். நகைகள் எந்த அளவிற்கு அதிகமாக இருந்தது என்றால் மேஜை முழுவதும் நகைகளால் நிரம்பி விட்டது. தங்க மாலைகள், மோதிரங்கள், வளையல்கள் போன்றவைகள் அதிக எண்ணிக்கையில் இருந்தது. என்னுடைய பெயரை வெளிப்படுத்த வேண்டாம் என்று அந்தப் பெண்மணி கூறி விட்டார். என்னுடைய தியாகம் இறைவனுக்காக மட்டுமே இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். நகை பெண்ணுடைய பலவீனமாகும். ஆனால், அஹ்மதி பெண்கள் இந்த தியாகங்களைச் செய்கின்றனர்.

இங்கும் கூட ஓர் அஹ்மதி பெண் என்னை சந்தித்தார். நான் என்னுடைய அனைத்து நகைகளையும் சந்தாவாக கொடுத்து விட்டேன் என்று அவர் கூறினார். பள்ளிவாயிலுக்கான ஃபண்டிலோ அல்லது வேறு ஏதோவொரு விஷயத்திற்காகவோ அதை வழங்கி இருந்தார். அவர் கூறினார்: ஆனால் என்னுடைய மாமியார் வீட்டிலுள்ளவர்களின் கூற்று எனக்கு பிடிக்கவில்லை. நீ ஏன் நகையை கொடுத்தாய்? என்று அவர்கள் என்னிடம் கேட்கின்றனர். இதுபோன்று பல்வேறு வகையான குத்திக் காட்டல்களைச் செய்கின்றனர்.

அல்லாஹ் தனக்காக தியாகம் செய்பவர்களுக்கு அருள் செய்கின்றான். அல்லாஹ்விற்காக தியாகம் செய்த இந்த பெண்மணிக்கும் அல்லாஹ் அருள்வான் – இன்ஷா அல்லாஹ். ஆனால், எவரையும் பொருள் தியாகம் செய்வதிலிருந்து தடுக்கக் கூடியவர்கள் சிந்திக்க வேண்டும். செல்வத்தை வழங்குவதும் இறைவன் ஆவான். அவனால் நன்றிகேடு காட்டக் கூடியவர்களிடமிருந்து அதை பறிக்கவும் முடியும். இதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, எவர்களுடைய உள்ளத்தில் இதுபோன்ற சிந்தனைகள் எழுகின்றதோ அவர்கள் அதிகமாக பாவமன்னிப்பு கோர வேண்டும்.

ரஷ்யாவிலும் பல்வேறு சம்பவங்கள் உள்ளன. ஒரு நண்பர் லீனார் சாஹிப் கூறுகின்றார்: அவர்களுடைய நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. வாடகை வீட்டில் வசித்து வந்தார். பல்வேறு வகையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்தார். ஆனால், தன்னுடைய கட்டாயச் சந்தா மற்றும் தஹ்ரீகே ஜதீது சந்தாவை தனது வசதிக்கேற்ப செலுத்தி வந்தார். அவர் கூறுகிறார்: அந்த சந்தாவின் அருளால் என்னுடைய மனைவிக்கு மருத்துவக் கல்லூரியில் படித்த பிறகு அரசாங்க வேலை கிடைத்து விட்டது. மேலும், அரசாங்கம் குழந்தைகள் தங்குவதற்கான வீட்டிற்கான ஏற்பாட்டையும் செய்தது. பொருளாதார நிலை முன்பை விட நன்றாக ஆகி விட்டது. அல்லாஹ்வின் அருளால் எங்களிடம் இரண்டு வண்டிகளும் இருக்கின்றது. இவை அனைத்தும் அல்லாஹ்வின் அருள் மற்றும் சந்தா கொடுத்ததன் விளைவேயாகும் என்று கூறுகிறார். ஆரம்பத்தில் மிகவும் கடுமையான நிலையிலும் கூட சந்தாவை வழங்கி வந்தோம். இப்போது அல்லாஹ் நிறைய வசதிகளை வழங்கி இருக்கின்றான். இப்போது ரஷ்யாவில் இருக்கக் கூடியவருக்கும் அல்லாஹ் அருள்கின்றான். ஆப்பிரிக்காவில் இருக்கக் கூடியவருக்கும் அருள்கின்றான். இந்தோனேஷியாவில் இருக்கக் கூடியவருக்கும் அருள்கின்றான். மற்ற நாடுகளிலும் ஐரோப்பாவிலும் அருள்கின்றான். இவைகள் அனைத்தும் நிரூபிப்பது என்னவென்றால், அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்துள்ள வாக்குறுதியை அதாவது நேசர்களின் ஒரு கூட்டத்தை உமக்கு வழங்குவேன். மேலும் அவர்களின் ஈமானை அதிகரிப்பேன் என்பதைக் காட்டுகின்றது. எவர்கள் அல்லாஹ்வின் பக்கம் முன்னேறுகிறார்களோ அவர்களை அல்லாஹ் ஈமானிலும் முன்னேறச் செய்கின்றான். பொருள் தியாகங்கள் மற்றும் அல்லாஹ்வின் அருட்கள் பற்றிய எண்ணற்ற சம்பவங்கள் இருக்கின்றன. என்னிடம் வந்துள்ள சம்பவங்களிலிருந்து எதை தேர்ந்தெடுப்பேன் என்பது கடினமாகி விட்டது. ஒரு சிலவற்றை மட்டுமே எடுத்துக் கூறியுள்ளேன். நான் கூறியது போன்று எல்லா நாட்டில் வசிக்கக் கூடியவர்களுடனும் அல்லாஹ் இவ்வாறே நடந்து கொள்கின்றான். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தவாறு அவனுக்காக தியாகங்கள் செய்கின்றவர்களுக்கு அல்லாஹ் அளவில்லாமல் அருள்கின்றான்.

ஒரு அறிவு படைத்த மனிதனுக்கு அஹ்மதிய்யத்தின் உண்மையை அறிய இந்த ஆதாரமே போதுமானதாகும். எவ்வாறு தியாகத்தின் விளைவாக தியாகம் செய்யக் கூடியவர்களுக்கு அல்லாஹ் அருள்கிறான். ஏனென்றால் இந்த சந்தாக்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தை பரப்புவதற்காக செலவிடப்படுகின்றன. ஏழை நாடுகளிலுள்ளவர்கள் சந்தாக்களைக் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்களின் செலவீனங்கள் அவர்களுடைய சந்தாக்களை விட அதிகமாக இருக்கின்றது. எனவே, பணக்கார நாடுகளிலிருந்து பெறப்பட்ட சந்தாக்களை மேலிடம் எந்த நாடுகளில் சந்தா பூர்த்தியாகவில்லையோ அந்த நாடுகளில் செலவிடுகின்றது. நூற்றுக்கணக்கான பள்ளிக்கூடங்களும், பல டஜன் மருத்துவமனைகளும், நூற்றுக்கணக்கான மிஷன் ஹவுஸ்களும், நூற்றுக் –கணக்கான பள்ளிவாயில்களும் ஒவ்வொரு வருடமும் கட்டப்பட்டு வருகின்றது. அவைகளுக்காக பணத்தின் தேவை இருக்கின்றது. அவை தஹ்ரீகே ஜதீது மற்றும் வக்ஃபே ஜதீது சந்தாவின் மூலம் பூர்த்தி செய்யப்படுகின்றது.

இதே போன்று M.T.A –விற்காகவும் பல மில்லியன் டாலர்கள் செலவாகின்றது. தர்பிய்யத் ஃபண்ட் என்றும் M.T.A –விற்கு தனி ஃபண்டும் இருக்கின்றது. அதில் மக்கள் சந்தாவும் வழங்குகின்றனர். ஆனால், அவ்வாறிருந்தும் கூட செலவு அதை விட அதிகமாகும். M.T.A தொடர்பாக நான் இதையும் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். ஆராய்ந்து பார்த்ததன் அடிப்படையில் இங்கு M.T.A கேட்கும் பழக்கம் எந்த அளவிற்கு இருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு இல்லை அல்லது குறைந்தபட்சம் என்னுடைய குத்பாக்களை நேரடியாக கேட்பதில்லை. ஜமாஅத் அளவில்லாமல் செலவிடுகின்றது. அது ஜமாஅத்தின் தர்பிய்யத்திற்காகவே ஆகும். நேரம் வித்தியாசப்படுகிறது என்றாலும் கூட மறு ஒளிபரப்பு வரும் போது குத்பாவை கேட்க வேண்டும். எண்ணற்ற அந்நியர்கள் குத்பாவை கேட்கின்றனர். நாங்கள் ஜமாஅத்தை சார்ந்தவர்கள் அல்ல. ஆனால், உங்களது குத்பாவை கேட்கிறோம் என்று எனக்கு எழுதவும் செய்கின்றனர். அல்லாஹ் M.T.A –வை ஜமாஅத்தை கிலாஃபத்தோடு ஒன்றிணைப்பதற்கு ஒரு ஊடகமாக ஆக்கி இருக்கின்றான். வீடுகளில் நீங்கள் இதன் பக்கம் கவனம் செலுத்தவில்லையெனில் மெது மெதுவாக உங்களது சந்ததிகள் பின்னால் விலகி செல்ல ஆரம்பித்து விடுவார்கள். அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்துள்ள வாக்குறுதிகளை கண்டிப்பாக பூர்த்தி செய்வான் – இன்ஷா அல்லாஹ். தூய உள்ளம் கொண்டவர்களும் வருவார்கள். புதிதாக இணைபவர்களின் கலப்பற்ற தன்மை எவ்வாறு அதிகரித்துள்ளது என்பதை நீங்கள் பார்க்கவும் செய்கின்றீர்கள். ஆனால், புதிதாக வருபவர்கள் அனைத்தையுமே கொண்டு செல்லும் நிலையில் பழையவர்கள் எங்களுடைய தந்தை பாட்டனார் சஹாபிகளாக இருந்தனர். நாங்கள் பழைய அஹ்மதிகளாவோம் என்று மட்டும் இருந்து விடாதீர்கள். அல்லாஹ்வுக்கு யாரோடும் எந்த உறவும் கிடையாது. பழையவர்கள் தம்மை தூர விலக்கிக் கொண்டால் தந்தையும் பாட்டனாரும் சஹாபியாக இருந்ததோ அல்லது அவர்களுடைய சொந்தக்காரர்களாக இருந்ததோ எவ்வித பயனையும் அளிக்காது.

ஆக, வருந்தும் தருணம் வருவதற்கு முன்னரே தங்களை கிலாஃபத்தோடு இணைத்துக் கொள்ளுங்கள். அதற்கான சிறந்த வழிமுறையாக இறைவன் M.T.A –வை வழங்கி இருக்கின்றான். அதை பயன்படுத்துங்கள். வேறு பல நல்ல நிகழ்ச்சிகளும் M.T.A –வில் வருகின்றன. ஆனால் குறைந்தபட்சம் குத்பாவை –யாவது கேளுங்கள். முரப்பி சாஹிப் சுருக்கத்தை வாசித்து விட்டார். எனவே குத்பாவில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பது எங்களுக்கு தெரிந்து விட்டது என்று இருக்கக் கூடாது. சுருக்கத்தைக் கேட்பதற்கும், முழுமையாக கேட்பதற்கும் வித்தியாசம் இருக்கின்றது.

நான் கூறியது போன்று தஹ்ரீகே ஜதீதின் புதிய ஆண்டு ஆரம்பமாகின்றது. பழைய ஆண்டு நிறைவடைகின்றது. இந்த புதிய ஆண்டிற்கான அறிவிப்பை செய்கின்றேன். அநேகமாக கனடாவிலிருந்து முதல் முறையாக இந்த அறிவிப்பு செய்யப்படுகின்றது. இது அல்லாஹ்வின் பேரருளாகும். ஜமாஅத் எந்த அளவிற்கு பரந்து விரிந்து விட்டது என்றால் 1934 –ல் அஹ்ராரிகள் ஜமாஅத்தை அழித்து விடுவோம் என பேசி வந்தனர். காதியானின் செங்கல்களை பிடுங்கி வீசி எறிந்து விடுவோம் என்று கூறி வந்தனர். அப்போது ஹஸ்ரத் மஃவூது (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீதிற்கான அறிவிப்பைச் செய்து உலகில் மிஷனரிகளை அனுப்புவதற்கான திட்டத்தை வகுத்தார்கள். தப்லீகிற்கு ஒரு முழுமையான திட்டம் வகுக்கப்பட்டது. இன்று அல்லாஹ்வின் அருளால் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் அஹ்மதிய்யா ஜமாஅத் அறியப்படுகின்றது. 209 நாடுகளில் ஜமாஅத் நிறுவப்பட்டு விட்டது. இன்று ஜமாஅத் என்ற அளவில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது மட்டுமே சூரியன் மறைவதில்லை. காதியானிலிருந்து அஹ்மதிய்யத்தின் குரலை ஒழித்து விடுவோம் என்று கூறிய அஹ்ராரிகள் எங்கே போனார்கள்? இன்று உலகின் மேற்கின் மூலையிலிருந்து முழு உலகிலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தியை அன்னாரின் ஓர் அடியான் மற்றும் ஒரு சிறிய சேவகன் பரப்பிக் கொண்டிருக்கின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கியிருந்த வாக்குறுதி மகத்துவத்தோடு பூர்த்தியாகிக் கொண்டிருக்கின்றது. இந்த விஷயங்கள் அதன் மீது பொறுப்பை சுமத்துகின்றது என்பதை ஒவ்வோர் அஹ்மதியும் புரிந்து கொள்ள வேண்டும். மேலும், இந்த பொறுப்பை நிறைவேற்றுவது உங்கள் அனைவரது கடமையாகும். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக!

இப்போது நான் தஹ்ரீகே ஜதீதின் புதிய ஆண்டிற்கான அறிவிப்பை செய்கின்றேன். மேலும், வழக்கத்திற்கேற்ப ஒரு சில விவரங்களையும் எடுத்து வைக்கின்றேன். அல்லாஹ்வின் அருளால் நடந்து முடிந்த தஹ்ரீகே ஜதீதின் இந்த நிதியாண்டு அக்டோபர் 31 ஆம் தேதியோடு நிறைவடைந்தது. இது 82 –வது ஆண்டாக இருந்தது. நவம்பர் 1 ஆம் தேதியிலிருந்து 83 –வது ஆண்டு ஆரம்பமாகி விட்டது. அதற்கான அறிவிப்பை நான் செய்துள்ளேன். அல்லாஹ்வின் அருளால் வந்திருக்கக்கூடிய அறிக்கைகளின் அடிப்படையில் தஹ்ரீகே ஜதீதினுடைய பொருளாதார திட்டத்தில் இந்த வருடம் முழு உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு ஒரு கோடியே ஒன்பது இலட்சத்து 33 ஆயிரம் பவுண்டுகள் தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்திருக்கின்றது – அல்ஹம்துலில்லாஹ். இந்த வசூல் கடந்த ஆண்டை விட 17,17,000 பவுண்டுகள் அதிகமாகும்.

ஜமாஅத்துகளின் தர வரிசையின் அடிப்படையில் எப்போதும்போல் பாகிஸ்தான் முதல் இடத்தில் உள்ளது. அதைத் தவிர்த்து முதல் இடத்தில் ஜெர்மனி உள்ளது. 2 –வது இடத்தில் பிரிட்டனும், 3 –வது இடத்தில் அமெரிக்காவும், 4 –வது இடத்தில் கனடாவும், 5 –வது இடத்தில் இந்தியாவும், 6 –வது இடத்தில் ஆஸ்திரேலியாவும், 7 –வது இடத்தில் மத்திய கிழக்கு நாடுகளின் ஒரு ஜமாஅத்தும், 8 –வது இடத்தில் இந்தோனேஷியாவும், 9 –வது இடத்தில் மத்திய கிழக்கின்

EDITOR
MUZZAMMIL AHMAD
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 | Thursday 15 DECEMBER 2016 | Issue No. 41

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

இன்னொரு நாடும், 10 –வது இடத்தில் கானாவும், 11 வது இடத்தில் சுவிட்சர்லாந்தும் உள்ளது. சுவிட்சர்லாந்தின் தனி நபர் சந்தா அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அதையும் இணைத்துள்ளேன். இல்லையென்றால் 10 வரைதான் தர வரிசைப் பட்டியல் ஆகும்.

தனி நபர் சந்தா செலுத்துவதன் அடிப்படையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. பிறகு சுவிட்சர்லாந்து, யூ.கே, ஃபின்லாந்து, சிங்கப்பூர், ஜெர்மனி, சுவீடன், நார்வே, ஜப்பான், கனடா போன்றவைகள் உள்ளன. மத்திய கிழக்கு நாடுகளின் பெயர்களை நாம் கூறுவதில்லை. ஐந்து நாடுகள் இந்த ஜமாஅத்துகளை விட முன்னிலையில் இருக்கின்றன.

ஆப்பிரிக்க நாடுகளில் மொத்த வசூலின் அடிப்படையில் முதலிடத்தில் மொரீஷியஸ், கானா, நைஜீரியா, கேம்பியா, தென் ஆப்பிரிக்கா, புர்கினோஃபாஸோ, கேமரூன், சிராலியோன், லைபேரிய்யா, தன்ஸானிய்யா, மாலி போன்ற நாடுகள் உள்ளன.

இணையக் கூடியவர்களின் எண்ணிக்கையில் இந்த வருடம் 90,000 பேர் அதிகரித்துள்ளனர். மேலும் 14,04,000 –க்கும் அதிகமானோர் இணைந்துள்ளனர். இதில் பெனினில் அதிக முயற்சி செய்யப்பட்டுள்ளது. நைஜர், மாலி, புர்கினோஃபாஸோ, கானா, லைபேரியா, செனிகால், கேம்ரோன் போன்ற நாடுகளில் அதிகம் இணைந்துள்ளனர். உலகின் எல்லா இடங்களிலும் இதன் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டியதுள்ளது.

முதல் பதிவேட்டின் கணக்குகளில் அனைத்தும் இப்போதும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதில் சந்தாக்கள் வந்து கொண்டிருக்கின்றது. அவர்களுடைய உறவினர்கள் தரப்பிலிருந்தோ அல்லது தாங்களே உயிரோடு இருந்தால் அவர்கள் தரப்பிலிருந்தும் வந்து கொண்டிருக்கின்றது.

பாகிஸ்தானுடைய மூன்று பெரிய ஜமாஅத்துகளில் முதல் இடத்தில் லாஹூரும், 2 –வது இடத்தில் ரப்வாவும், 3 –வது இடத்தில் கராச்சியும் உள்ளது.

அதற்குப் பிறகு வசூலின் அடிப்படையில் 10 நகர்ப்புற ஜமாஅத்துகளில் முதல் இடத்தில் இஸ்லாமாபாத், பிறகு முல்தான், குவைட்டா, பெஷாவர், குஜ்ரான்வாலா, ஹைதராபாத், ஹாபிழாபாத், மியான் வாலி கோட்லி, கானேவால் மற்றும் பஹாவல்பூர் போன்றவகைள் முறையே உள்ளன.

ஏழ்மை இருந்தும் கூட பாகிஸ்தானின் சந்தா உயர் தரமாக இருக்கின்றது. அதிக பொருள் தியாகம் செய்த பாகிஸ்தானின் முதல் 10 மாவட்டங்களில் முதல் இடத்தில் சியால்கோட், பிறகு ஃபைஸலாபாத், சர்கோதா, குஜ்ராத், உமர்கோட், உக்காடா, நாரோவால், மீர்பூர்ஹாஸ், டோபா டேக்சிங், மன்டி பஹாவுத்தீன், மீர்பூர், ஆஸாத் காஷ்மீர் போன்றவைகள் ஆகும்.

ஜெர்மனியின் முதல் 10 ஜமாஅத்துகள்: ரொய்டர் மார்க், நோயிஸ், வைன் கார்டன், ரான்ஹைன் சவுத், ஃப்ளோரஸ்ஹைம், லெம்பர்க், கேலோ(ன்), காப்லன்ஸ், நீதா, மஹ்தியாபாத்.

மேலும், 10 உள்ளூர் அமாரத்துகள்: ஹம்பர்க், ஃப்ராங்பர்ட், கிராஸ்க்ராவ், மால்ஃபெல்டன், வால்டோஃப், வீஸ்பாதன், டிட்ஸன்பாக், ஆஃபன்பாக், மான்ஹைன், டாம்ஸ்டெட், ரிச்சர்ஸ்டெட்.

மொத்த வசூலின் அடிப்படையில் பிரித்தானியாவின் முதல் ஐந்து மண்டலங்கள்: London B, London A, Midlands, North East, South Region.

முதல் 10 ஜமாஅத்துகள்: முதல் இடத்தில் Masjid Fazal, Uster park, Glasco, Bermingam South, New Molden, Bredford, Islamabad, Jilingam, Mask West, Wimbledon Park.

தனி நபர் சந்தா செலுத்துவதின் அடிப்படையில் முதல் ஐந்து மண்டலங்கள். South West, Islamabad, Scotland, Midlands, North East.

பெரிய ஜமாஅத்துகள்: பிராங்லே, அலேஷம், லிவிங்ட்ஸன்பர், இஸ்லாமாபாத், ஸ்கந்தவ், பெர்மிங்கம் சவுத், உஸ்டர்பார்க், ஜிலிங்கம், போர்மத், சவுத் ஹேம்டன், மஸ்ஜிது ஃபஸல், மாஸ்க் வெஸ்ட்.

வசூலின் அடிப்படையில் கனடாவிலுள்ள உள்ளூர் அமார்த்துகளில் முதல் இடத்தில் பீஸ் வில்லேஜ், வான், கேல்கிரி, பிராம்டன், வென்கோவர், மிர்ஸாகா.

வசூலின் அடிப்படையில் அட்மின்ட்டன் வெஸ்ட் முதல் இடத்திலும், திர்ஹம், சிஸ்கடோன் சவுத், சிஸ்கடோன் நார்த், மில்ட்டன் ஈஸ்ட், ஆட்வா வெஸ்ட், ஆட்வா ஈஸ்ட், ரெஜைனா போன்றவைகள் உள்ளன.

என்னுடைய கணிப்பின் அடிப்படையில் லயிட் மின்ஸ்டர் ஜமாஅத்தும் கூட செயல் துடிப்புள்ள ஜமாஅத் என்று நினைத்தேன். சதர் சாஹிபும் செயல் துடிப்புடன் பணியாற்றியக்கூடியவர் போன்று தோன்றியது. அங்குள்ளவர்களின் பொருளாதார நிலையும் நன்றாக இருக்கிறது என்று என்னிடம் கூறப்பட்டது. அவர்களுக்கு எந்த இடமும் கிடைக்கவில்லை.

மொத்த வசூலின் அடிப்படையில் அமெரிக்காவின் ஜமாஅத்துகளில் சிலிகான்வேலி முதல் இடத்திலும், ஆஷ்க்காஷ், டெட்ராய்டு, சியாட்டல், யார்க், சென்ட்ரல் வெர்ஜினியா, லாஸ் ஏஞ்சிலிஸ், சில்வர் ஸ்பிரிங், சென்ட்ரல் ஜெர்ஸீ, சிக்காகோ சவுத் வெஸ்ட், லாஸ் ஏஞ்சிலிஸ் வெஸ்ட் போன்றவைகள் முறையே உள்ளன.

இந்தியாவிலுள்ள முதல் பத்து ஜமாஅத்துகள். கருளாயி – கேரளா, கோழிக்கோடு – கேரளா, ஹைதராபாத் – ஆந்திர பிரதேசம், பத்தபிரியம் – கேரளா, காதியான், கன்னூர் டவுண் – கேரளா, பைங்காடி – கேரளா, தில்லி, கொல்கத்தா – மேற்கு வங்காளம் பிறகு சூளூர் – தமிழ் நாடு.

இந்தியாவினுடைய முதல் பத்து மாநிலங்களின் முதல் இடத்தில் கேரளா, பிறகு கர்நாடகா, ஆந்திர பிரதேசம், தமிழ்நாடு, ஜம்மு காஷ்மீர், ஒடிஷா, பஞ்சாப், பெங்காள், தில்லி மேலும் மஹாராஷ்டிரா போன்றவைகள் உள்ளன.

இந்தியாவிலும் கடந்த சில ஆண்டுகளாக நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. முதலில் இவர்கள் மிகவும் பின்தங்கி இருந்தார்கள்.

ஆஸ்திரேலியாவின் முதல் பத்து ஜமாஅத்துகள்: இங்கும் அல்லாஹ்வின் அருளால் இவர்கள் முன்னேறுகின்றனர். முதல் இடத்தில் மெல்போர்ன், பேர்விக், காஸில் ஹில், ஏ.சி.டி. கேன்ரோ, மாஸ்டன் பார்க், பிரிஸ்பேன், லோகன் பெஸிட், மெல்பர்ன் லாங்வான், அடிலைடு சவுத், பிலம்ப்டன், மெல்பர்ன் ஈஸ்ட்.

இதே போன்று வசூலின் அடிப்படையில் அதாவது தனி நபர் வசூலின் அடிப்படையில் பத்து ஜமாஅத்துகள்: தஸ்மானிய்யா, பிரிஸ்பன் நார்த், ஏ.சி.டி. கேன்ரோ, சிட்னி, மெட்ரோ, டார்வன், பெரமேட்டா, மெல்பர்ன் பேர்விக், பெர்த், மாஸ்டன் பார்க், காஸில் ஹில்.

அல்லாஹ் இந்தத் திட்டத்தில் இணைந்த அனைவரின் பொருளிலும் ஆன்மாவிலும் அளவற்ற அருள் புரிவானாக! மேலும் இவர்களின் தியாகங்களை ஏற்றுக் கொள்வானாக! மேலும் இனியும் முன்னேறியவாறு பங்கு பெறுவதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக! மேலும் இவர்களுக்கு கிலாஃபத்தோடு இன்னும் உறுதியான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டே செல்வானாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

பொய்யராகி விட்டார் என்று கூறுவீர்களா ? இது இறைவனின் கருணை ஆகும். அதாவது எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகளில் அவற்றை ரத்து செய்து விடுகின்ற தொடரை அவன் தன் தரப்பிலிருந்து நீடிக்கச் செய்கின்றான். எதுவரையென்றால், நரகத்தில் என்றென்றும் இருக்கின்ற எச்சரிக்கை திருக்குர்ஆனில் நிராகரிப்பவர்களுக்கு கூறப்பட்டிருக்கின்றது. அங்கும் கூட اِلَّا مَا شَآءَ رَبُّكَ ؕ اِنَّ رَبَّكَ فَعَّالٌ لِّمَا يُرِيْدُ என்ற திருக்குர்ஆனின் வசனம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதாவது, உங்கள் இறைவன் நாடியவர்களை தவிர காஃபிர்கள் என்றென்றும் நரகத்தில் இருப்பர். ஏனென்றால், எதை அவன் விரும்புகின்றானோ அதை செய்வதற்கு அவன் ஆற்றல் உள்ளவன் ஆவான். ஆனால், சுவர்க்கவாசிகளைப் பற்றி இவ்வாறு அவன் கூறவில்லை. ஏனென்றால் அது வாக்குறுதியாகும். எச்சரிக்கை அல்ல.[2]

1 அஹ்மது பேக்கின் மருமகன் பற்றி எந்த மக்கள் மீண்டும் மீண்டும் கூறுகின்றனரோ அவர்கள் ஒருபோதும் தமது நாவால் இந்த முன்னறிவிப்பின் ஒரு பகுதி நிறைவேறி விட்டது என்று கூறுவதேயில்லை. ஏனென்றால், குறிப்பிட்ட அந்த கால அவகாசத்திற்குள் அஹ்மது பேக் இறந்து விட்டார். அவர்களிடம் சிறிதளவு நேர்மை இருக்கும் என்றால் இந்த முன்னறிவிப்பின் இரு பகுதிகளுள் ஒரு பகுதி நிறைவேறி விட்டது. இரண்டு கால்களில் ஒரு கால் உடைந்து விட்டது என்று அவர்கள் கூறியிருக்க வேண்டும். ஆனால், காழ்ப்புணர்ச்சியும் கூட ஒரு நூதனமான சோதனை ஆகும். நீதியின் சொற்களை அது நாவில் வரவிடுவதில்லை.

2 திருக்குர்ஆனில் காஃபிர்களுக்கும், இணைவைப்பவர்களுக்கும் தண்டனையாக மீண்டும் மீண்டும் خٰلِدِيْنَ فِيْهَآ اَبَدًا 'அவர்கள் என்றென்றும் அதில் இருந்து வருவர்' என்று இறைவன் கூறியுள்ளான். அவ்வாறிருந்தும் கூட திருக்குர்ஆனில் நரகவாசிகள் தொடர்பாக اِلَّا مَا شَآءَ رَبُّكَ 'உனது இறைவன் நாடியவர்களை தவிர' என்ற வசனமும் இருக்கின்றது.

ஹதீஸிலும் இவ்வாறு வந்துள்ளது. يَأْتِيْ عَلٰى جَهَنَّمَ زَمَانٌ لَيْسَ فِيْهَا اَحَدٌ وَنَسِيْمُ الصَّبَا تُحَرِّكُ اَبْوَابَهَا அதாவது, 'நரகத்தின் மீது ஒரு காலம் வரும். அப்போது அதில் எவரும் இருக்க மாட்டார்கள். தென்றல் காற்று அதன் ஜன்னல் கதவுகளை அசைக்கும்.' சில நூல்களில் பாரசீக மொழியில் இந்த ஹதீஸ் எழுதப்பட்டுள்ளது. 'இந்த ஒரு கைப்பிடி மண்ணை நான் மன்னிக்கவில்லையென்றால் வேறு யார்தான் மன்னிப்பார் ?'

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 194-196)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad